

அருளாட்சி நாயகம்
பதினொராவது பதினெண்சித்தர்
பீடாதிபதி காவிரியாற்றங்கரை
கருவூறார்



அருளாட்சி நாயகம்
பன்னிரெண்டாவது பதினெண்சித்தர்
பீடாதிபதி சித்தர்
கருவூறார்



அருள்மிகு அம்மையப்பர்

# சாமி கும்பிடத் தெரியுமா?
# சாமி கும்பிடுவது எப்படி?



அருளாட்சி நாயகம் அருட்கொடை வள்ளல்
பன்னிரெண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
ஞானாச்சாரியார் சித்தர் அரசயோகி கருவூறார்
அவர்களின் பொற்பாதங்களில் எங்களது
**காணிக்கை**



## அண்ட பேரண்ட அருட்பேரரசர்

தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய பிற்கால சோழப் பேரரசின் தந்தை
அருளாட்சி நாயகம் பதினோராவது பதினெண்சித்தர்
பீடாதிபதி ஞானச்சாரியார் சித்தர்
காவிரியாற்றங்கரை கருவூரார்


ஓம் குருவே எல்லாம் . . .



* டெல்லி, காசி, சிம்லா, நேபாளம், டார்லிஜிங் ஆகிய வடஇந்திய மற்றும் ஐயப்பன் கோவில் சுற்றுலாக்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

* பள்ளி, கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு சுற்றுலாவை குறைந்த செலவில் சிறப்பாக அமைத்து தருவோம்.

# சன் டிராவல்ஸ
# SUN TRAVELS

எங்களிடம் பாஸ்போர்ட், விசா, NOC ஆகியவை குறைந்த செலவில் விரைவில் எடுத்துக்கொடுக்கப்படும்.

உரிமையாளர்: K. சிதம்பரம், B.Sc., B.Ed.,

**121, நேதாஜி ரோடு, S.V.S. பில்டிங் முதல் மாடி,**
**(மாடர்ன் ரெஸ்ட்ராண்ட் எதிரில்)**
**மதுரை – 625 001.**

**போன்: ஆபீஸ் 741133, 744466 வீடு 21133**

ஓம் குருவே எல்லாம் . . .

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சாமி கும்பிடத் தெரியுமா ? | பக்கம் | 1 |
| சாமி கும்பிடுவது எப்படி ? | பக்கம் | 16 |
| கோயில்களில் சாமி கும்பிடும் முறை | பக்கம் | 34 |
| கிராமத்து தேவர், தேவதை கோயில்களில் சாமி கும்பிடும் முறை | பக்கம் | 35 |
| குலதெய்வங்களை கும்பிடும் முறை | பக்கம் | 36 |
| குடும்ப ஆண்டவர் கும்பிடும் முறை | பக்கம் | 37 |
| நிறைவுரை | பக்கம் | 37 |



# அருளாட்சி மையத்தின் குருபீடம்

**பன்னிரெண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
தத்துவநாயகம், அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட
ஆதிசக்திகள் சன்னிதானம், அருட்கொடை வள்ளல்,
ஞாலகுருசித்தர், அரசயோகி கருவூறார்,
அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார்.**

ஓம் குருவே எல்லாம் . . .

வாழ்க தமிழ்! **முன்னுரை** வளர்க இந்தியா!

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்** என்பது
வான்புகழ் வள்ளுவன் வாக்கு.

ஆனால், எப்படி வாலறிவனைத் தொழுவது? கும்பிடுவது? வணங்குவது? என்பது தான் கேள்விக்குறி. அந்தக் கேள்விக்குறியை நீக்கும் பொருட்டு வெளியிடப்பட்டிருப்பதுதான் இந்த **சாமி கும்பிடத் தெரியுமா?, சாமி கும்பிடுவது எப்படி?** என்ற நூல்; இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடி ஆன்மிகவாதிகள் ஒழுகினால், நிச்சயமாக அருளை அனுபவப் பொருளாகப் பெறலாம் என்பது உறுதி. ஏனென்றால் ஆன்மிகவாதிகளால்தான் இப்பூவுலகைக் காப்பாற்றமுடியும் என்பது சென்னை செங்குன்றம் காரணோடை கருகுலத்தில் சமாதிநிலை கொண்டு எழுந்தருளும் **பன்னிரெண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, தத்துவநாயகம், அருளாட்சி நாயகம், ஞானச்சாரியார், ஞாலகுருசித்தர் அரசயோகி கருவூறார்** அவர்களின் கருத்தாகும்.

இந்த நூலில் கருவூறார் அவர்கள் தான் பெற்ற அனுபவங்களை எல்லாம் பதினெண்சித்தர்களின் இந்துவேதத்தில் கூறியுள்ளபடி அப்படியே அருளியிருக்கிறார்கள்.

ஆகவே, ஆன்மீக அன்பர்கள் அனைவரும் இந்த நூலைப் பயன்படுத்தி இறையருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

**பதினெண்சித்தர் மடம் பீடம்**
5, ராசுமுதலி தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை.

**அருளாட்சி மையம்**
8, பசும்பொன் தெரு, திருமங்கலம்,
மதுரை மாவட்டம்.



அருளாட்சி நாயகம்
பதினொராவது பதினெண்சித்தர்
பீடாதிபதி காவிரியாற்றங்கரை
கருவூறார்





அருளாட்சி நாயகம்
பன்னிரெண்டாவது பதினெண்சித்தர்
பீடாதிபதி சித்தர்
கருவூறார்

## அருளாட்சி நாயகம், அருட்கொடை வள்ளல் அவர்களின் அருளுரை

*இத்திருநாடு மறைத்ததால் மறைந்தவைகளும், மறுத்ததால் மறக்கப்பட்டவைகளும் இறந்தொழியவில்லை என்பதற்குச் சான்றே நான்.*

*தமிழே தெய்வமொழி, தேவமொழி, வேதமொழி, கடவுள்மொழி. தமிழர்களே அருளுலகின் மூலவர்கள், நாயகர்கள், காவலர்கள். தமிழகம்தான் கடவுள்களின் பிறப்பிடம், இருப்பிடம், காப்பிடம். தமிழரின் இந்துவேதத்தில் மட்டும்தான் மனிதரை கடவுளாக்கும் மந்திரம் உள்ளது. பதினெண்சித்தர்களின் தாய்மொழியுமான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுத தெய்வீக செந்தமிழ்மொழியால்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், உலக சமத்துவ, சகோதரத்தத்துவ, பொதுவுடமைக் கூட்டுறவு சமுதாயத்தையும் உலக அருளாட்சியையும் உருவாக்கமுடியும்.*

**உன் கவலைக்கு மருந்தாகிறேன்**
**உன் களிப்புக்கு விருந்தாகிறேன்**
**பிறர் மறுத்தாலும் வெறுத்தாலும்**
**உண்மையைக் கூறுதலே நன்மைதரும்**
**சமயம்தான் மொழித்தூய்மையையும்,**
**தனித்தன்மையையும் காக்கக்கூடியது**
**உருவவழிபாடே அருவுருசித்தியின் சத்திநிலை**

குருவும் திருவும் ஒன்றே

புறக்கண்ணுலும் அகக்கண்ணுலும் குருவைக் கண்டுணர்க

மனித இனம் கண்டமுதல் மதம் இந்துமதம் எனப்படும் சித்தர்நெறியே

கோயிலே மனித நாகரீகத்தின் தொட்டில் வழிபாடு மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி

இறைமை நினைவுகளே குறைகளை நிறைவு செய்யும்

இறைமையின் இருப்பிடங்களே சித்தர்கள்

நாடி வருபவர் அனைவருமே நாம் தேடுபவர்தான்.

குருவே அனைத்திற்கும் கருவாக இருக்கின்றார்.



**பதிமூன்றாவது**
**பதினெண்சித்தர்**
**பீடாதிபதி சித்தர்**
**கோசலையாற்றங்கரை**
**கருவூறார்**

**பன்னிரெண்டாவது**
**பதினெண்சித்தர்**
**பீடாதிபதி சித்தர்**
**ஞானாச்சாரியார் சித்தர்**
**அரசயோகி கருவூறார்**



**பன்னிரெண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர்**
**ஞானாச்சாரியார் சித்தர் அரசயோகி கருவூறார்**
**அவர்களின் அருட்குடும்பம்.**

# அன்றாடம் ஓதவேண்டிய காயந்திரி மந்தரங்கள்

## சத்தி காயந்திரி மந்தரம்

ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக!
தத்துவ வித்துக்கள் அரணாகுக!
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!

## சத்தி காயந்திரி மந்திரம்

ஓம் சத்தியே காத்தாயி அயனாய வித்தின் மகவே
வாலையே கன்னியே குமரியே நங்கையே தீயென மலர்ந்திடு
தீயே உன்னோடு தூர்த்திடு பிறச்சினையாவும்
தாயே என்னோடு உயிரினப் பயிரினக் காப்புவழங்கிடு

## பிள்ளையார் மந்தரம்

1. ஓம் காயந்திரிந்து, ஆவியான்மா ஆருயிர் ஒன்றாகிடுக!
2. பிள்ளையார், கணபதி, வினாயகர் மனைவியரோடு ஏந்தருளுக!
3. ஓம ஓக! யாக யக்ஞ! வேள்வித் தீயே! மூலாதாரப் பிறணவமாகுக!
4. சித்தி புத்தி! அத்தி முத்தி! வல்லபையாம் தீமை தீய்க்கும் தீயே!
5. இருளகற்றுக! இன்னல் தவிர்த்திடுக! அருள்நலம் வழங்கிடுக!

## முருகன் காயந்திரி மந்தரம்

1. ஓம் நாதாந்த விந்தாந்த ஓதங்கள் செயலாகுக!
2. ஓம் சித்தாந்த வித்துக்கள் பயிராகிப் பயனாகுக!
3. ஓம் ஆலமர் கடவுட் புதல்வ! முருக! காத்திடுக!
4. ஓம் வடிவேல! வாழ்வியல் பேரின்பம் நல்கிடுக!
5. ஓம் சரவணபவா! குகா! வேலா! முருகா! கந்தா! நாமாகிடுக!

## மீனாட்சி அம்மன் காயந்திரி மந்தரம்

1. ஓம் மீனாட்சியம் அங்கயற் கண்ணியம்
   அங்கயற்கன்னியம் பயனாகுக
2. ஓம் சொக்கியம் அங்கயற் கண்ணீசுவரம்
   அங்கயற்கன்னீசுவரம் காவலாகுக
3. ஓம் ஆலவாய் அழகியம் சொக்கீசுவரம்
   சொக்கநாயகீசுவரம் சுவையாகுக
4. ஓம் மீனாட்சியே ஓக யோக மோக போக
   அருட்பெருஞ்சோதியாகும்
5. இந்துவாகும் வேதமாகும் இந்துவேதமாகும்
   இந்துமதமாகும்
6. ஓம் ஓம்! ஓம் ஓம்! ஓம் ஓம்! ஓம் ஓம்!

## தாத்தா பாண்டி முனீசுவரர் மந்தரம்

பதினெண் வழிபடு நிலையினர் பதியே!
விண்கடந்த வாழ்வு காக்கும் கதியே!
எண்ணிலாத் தீவினை தீர்க்கும் ஆதியே!
துண்ணுரு துயருறுவோர் பரவும் ஓதியே! அருட்சோதியே!
தாத்தா மதுரைச் சோதியே! ஆண்டவரே! பாண்டிமுனீசுவரரே பேணுக!

## மாயோன் காயந்தரி மந்தரம்

1. ஓம் ஞால நாயகச் சேவகம்; செந்தாமரைப் பாதம்; சித்தக்கோலம்;
2. விசும்பளந்த வடிவம்; கார்மேனிநாதம்; யோகத் தத்துவம்;
3. தேவக்காவல்பீடம்; ஆதிமூலம்; பிறவிவிருப்பம்; போகமோகம்;
4. தவப்பிண்டம்; அண்டம், பேரண்டம், அண்ட பேரண்டம்;
5. மாயம், பிறவம், ஐம்பூதமுலம், ஆதிமூலம், தழைத்தெழுக!

## சீவ காயந்தரி மந்திரம்

தத்துவப் பிறப்பாய வித்தே! மகேசா!
மகாதேவே! நீ தீயே யாகி
தன்னோடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தாய்;
என்னோடு உன்னோடன்றி எங்கும் அருளூற
ஓம் நமச்சிவாய சிவாயநம ஒலியருளினாய்;
தழைத் தெழுநீ! நாங்கள் பிழைத்தெழ அருளுநீ!
அழைக்கிறோம்! செழுந்தீயே! செழித்தெழுநீ!
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி!
வசிவசி! வசிவசி! வசிவசி!
ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்;
ஓம் ஆவி, ஆன்மா, ஆருயிர் ஒன்றாகட்டும்;
தத்துவமே! நமச்சிவாய மென்றுணர்ந்தோம்
சித்தாந்தமே! சிவாயநம வென்றுணர்ந்தோம்
நங்! மங்! சிங்! வாங்! யங்!
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

## அருட்சினை மந்திறம்

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயே உனைவாழ்த்தி வணங்குகிறேன்.
ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு
நானாகிய அடியேன் நலம் வேண்டுகிறேன்.
தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணாகி விலகியோடி ஒழியட்டும்'

## ஈசுவரி காயந்திரி மந்திறம்

கோலமயில் வடிவம், நீலக்கடல் தோற்றம், பனிமலைத்தேகம்,
ஈசுவரி ஆரணம்;
பால்வண்ண மேனிநாதம், பவளஇதழ்க்கோலம், முத்துப்பல் ஆக்கம்,
சர்வேசுவரி ஆகமம்;
கார்மேகக் கூந்தல் போதம், உயிர் மூக்கின் பாடகம்,
எழிற்காதின் ஆடகம், பரமேசுவரி நேமம்;
சங்குக் கழுத்தின் ஓதம், உயர் மருப்பின் ஏடகம்; மின்னலிடையின்
ஊடகம், மகேசுவரி நியமம்;
வாளை மீன் காலின் சித்தம், செந்தாமரைப் பாதபோகம்,
அன்னநடையின் மோகம், பராசத்தி வேதம்;
மகாசத்திப்பீடம், ஏந்தரீகத்தடம், தாந்தரீக மடம், மாந்தரீகப்பாடம்,
யோகபோகத்தவடம்;

ஓகஓமம்! போகமோகம்! யாகயக்ஞம்! வேள்வித்தவம்! பூசைஞானம்!

## வியாழன் காயந்திரி மந்திறம்

1. குருவே! வியாழனே! பகவானே! தேவாசிரியனே!
2. மஞ்சள் வண்ணத்தானே! தினை நெய்யுளுந்து நாட்டத்தானே!
3. உடல் நலம் கல்விசெல்வம் புகழ்வாரிசு அருளுபவனே!
4. நெஞ்சம் சிந்தை கலந்து மஞ்சள்பூவால் வழிபடுகிறேன்;
5. தஞ்சம் புகுந்திட்டேன், எனையேற்றிடு, போற்றிப் பேணிடுவாயாக!
6. அவிர்ப்பலியேற்றுப் புவியின்பமெல்லாம் எந்தனுக்கே
தந்தருளுவாயாக!
7. நீயே *அறனாகுக! *அரியாகுக! *பிறமணாகுக!
8. தாயனையாய் சேயெனைக் காத்து அருள்புரிவாயாக!
9. ஊழ்வினை, ஆள்வினை, சூழ்வினை, விதி கடந்து கல்வி
தந்தருள்வாயாக!

## சனீசுவரக் காயந்திரி மந்தரம்

ஒன்பது கோள் நாயகனே! சனீசுவரா! தழைத்தெழு நீ! வாழியவே!
சனீசுவரா! பகவானே! அரையா! வித்தைகளின் மகவே!
பங்கு, வழங்கு, ஆதாயம், தீயில் மகிழுவே!
உன்னோடு மந்தநிலை, அந்திநிலைப் பிறச்சினைகள் அற்றிடட்டும்!
காக்கையேறு கருநாக ஈசுவரனே! கவலையகற்றிக் காத்திடுக!

## கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்

கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்
பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனைத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழித்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம் விளைக! நலம் விளைக! நலம் விளைக!
நான்மறையே! நான்முறையே! நாநெறியே! நான்வேதமே!
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

ஓம்

# சாமி கும்பிடத் தெரியுமா?!...

இன்றைக்கு கடவுளை மறுக்கும் நாத்திகர்களும். கடவுளை நம்புகிற ஆத்திகர்களும் ஏறத்தாழ சமஅளவு இருக்கின்றார்கள் என்று எண்ண வேண்டியிருக்கின்றது. ஏனென்றால். மிகச்சிறந்த ஆத்திகர்கள்கூட தங்கள் தங்களது மதச்சின்னமான 'திருநீறு. குங்குமம். சந்தனம். சாந்து. திருமண்ணான நாமம்' முதலியவைகளை முறைப்படி நெற்றியில் அணிவதில்லை. இன்னும் சொல்லப்போனால். படித்தவர்கள். அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள். கல்வித்துறையில் வேலைபார்ப்பவர்கள்..என்றுள்ள அனைவருமே மதச்சின்னங்களை அணிந்தால் பிறருடைய கேலிக்கும். கிண்டலுக்கும் உள்ளாக நேரிடும் என்று அஞ்சி மதச்சின்னங்களை வீட்டில் மட்டும் அணிந்து கொண்டு. வெளியே புறப்படும்பொழுது. அவற்றை நன்றாக துடைத்துவிட்டு முகம் முழுவதற்கும் இலேசாக பவுடர் பூசி மற்றவர்களுடைய முகம்போல் தங்களுடைய முகத்தையும் மாற்றிக்கொண்டு செல்லுபவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த நிலையை பார்க்கும்பொழுது. படித்தவர்கள். படித்துக் கொண்டிருப்பவர்கள் என்றுள்ள அனைவருமே நெற்றியில் மதச்சின்னங்களை அணிவதில்லை என்பது எல்லோரும் அறிந்த ஓர் உண்மையாகி விட்டது.

மேற்படி மதச்சின்னங்களை அணியாத ஆத்திகர்கள் வெளிப்படையாகவே 'மதச்சின்னங்களை அணிந்தால்தான் ஆத்திகன் என்ற மதிப்பு கிடைக்கும் என்றால். நாங்கள் நாத்திகர்களாகவே இருந்துவிட்டு போகிறோம்' 'மதச்சின்னங்களை அணிவதன்மூலம் அன்றாட வாழ்க்கையில் இன்னென்ன நன்மைகள் நடக்கும் அல்லது நடக்கின்றன என்று கூறக்கூடியவர்கள் யாராவது இருக்கின்றார்களா? இன்னும் சொல்லப்போனால் மதச்சின்னங்களை அணியாமல் வாழுகின்ற ஆத்திகப் பெருமக்கள்தான் இன்றைய சமுதாயத்தில் மதிப்புக்கும். மரியாதைக்கும் உரியவர்களாக இருக்கின்றார்கள்'. இந்த மதச்சின்னங்களை கடவுள்களால் உருவாக்கப்பட்டவையா? அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்டவையா? என்பதை சிந்திக்க யாருமே தயாராக இல்லை. உண்மையிலேயே கடவுளுக்கு மதச்சின்னங்களின்மீது. நம்பிக்கை இருக்குமேயானால். இந்து மதத்தைச் சார்ந்தவர்களின் குழந்தைகள் பிறக்கும்பொழுதே உரிய மதச்சின்னங்களை நெற்றியில் இயற்கையாகவே பெற்றவர்களாக அல்லவா பிறக்கவேண்டும். எனவே இவற்றையெல்லாம் பெரிய பெரிய மாநாடுகள். கருத்தரங்குகள். கருத்துப் பரிமாற்ற சிந்தனை மன்றங்கள். பட்டிமன்றங்கள் முதலியவற்றில் அல்லவா 'மதச்சின்னங்களை அணிவது தேவையா? அப்படி மதச்சின்னங்களை அணிவதன் மூலம் ஏற்படக்கூடிய ஈட்டம் (இலாபம்) என்ன? அல்லது மதச்சின்னங்களை அணியாது இருப்பதன்மூலம் ஏற்படக்கூடிய இழப்பு (நட்டம்) என்ன?' என்று ஆராய்ச்சி செய்தால் அல்லவா நன்றாக இருக்கும்.

மேற்படி ஆராய்ச்சிகளை அறிவியல் பூர்வமாக விவாதிப்பதற்கு இன்றைய மடாதிபதிகள். பீடாதிபதிகள். சன்னிதானங்கள். ஆச்சாரியார்கள். குருக்கள் என்றுள்ள ஆன்மீகத் தலைவர்கள் தயாராக இருக்கிறார்களா அல்லது அறிவியல்

பூர்வமான ஆராய்ச்சிகளை அனுமதிப்பார்களா? என்பது விடை காணமுடியாத வினாவாகவே தொடர்ந்து இருக்கின்றது.

இதனால்தான், எளிதில் நாத்திகர்களையும், ஆத்திகர்களையும் இனம் பிரித்து கண்டுகொள்ள முடியவில்லை. நாத்திகர்களுக்கு பயந்த ஆத்திகர்களும், ஆத்திகர்களுக்கு பயந்த நாத்திகர்களும் நெற்றியில் மதச்சின்னங்களை அணியாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தநிலை தொடர்ந்திட்டால், மிக விரைவில், இந்து, இந்துவேதம், இந்துவேதப்பண்பாடு, இந்துவேத நாகரீகம், இந்துமத பழக்கவழக்கங்கள், இந்துமத நாகரீகம், இந்துமத வாழ்வியல்கள், திருநாள்கள், திருவிழாக்கள், சடங்குகள் முதலியவைகள் எல்லாம் மெல்ல மெல்ல நலிந்து மெலிந்து ஒழிந்து போக நேரிடும். இதை மாற்றுமதக்காரர்களோ, வேற்றுவேதகாரர்களோ முயன்று செய்ததில்லை? செய்யவும் இயலாது. ஆனால் இந்துமதத்திற்குள்ளே இருக்கக்கூடிய 'மதப்போலிகள்' மதக்காலிகள், மதக்கூலிகள், இந்துமத விரோதிகள், இந்துமத துரோகிகள், இந்துவேதம் என்றால் என்னவென்று தெரியாத அப்பாவிகள், இந்துமதத்தின் சாத்தர, சாத்திர, சாத்திறங்களை முறையாகப் படிக்காத அறைகுறைகள், பாரம்பரிய உரிமையைக் கோரி மடாதிபதியாக, பீடாதிபதியாக, சன்னிதானமாக, ஆதீனமாக, மதத்தலைவர்களாக, குருக்களாக, பூசாரிகளாக, அருட்சினையாளர்களாக இருப்பவர்களால்தான் இந்துமதம் மிகமிக அவலகேவல நிலைகளைப் பெற்று நலிந்து, மெலிந்து, இழிந்து, அழிந்து, ஒழிந்துக் கொண்டிருக்கிறது என்ற கருத்து படித்தவர்களிடமும், படிக்காதவர்களிடமும் இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், ஆத்திகர், நாத்திகர் என்ற இருபிரிவினரிடையே மதவீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் அன்னியர்களின் சூழ்ச்சிக்கும் காரணம் இந்துமதத்தின் தலைவர்களாக, குருமார்களாக, கருக்கள்களாக, பூசாரிகளாக, பீடாதிபதிகளாக, ஆச்சாரியர்களாக, மடாதிபதிகளாக, பீடாதிபதிகளாக இருப்பவர்களின் பொறுப்பற்ற தன்மை தான் காரணம். இதனால்தான் ஆத்திகர்கள் கூட நாத்திகர்கள்போல் பேசவும், செயல்படவும் செய்யும் இரண்டும் கெட்டான்நிலை நாட்டில் தொடர்கிறது.

இப்பேருண்மைகளை நூற்றுக்கு தொண்ணூறு இந்துக்கள் உணர்ந்திருந்தும் துணிவாக, வெளிப்படையாக கூறவோ அல்லது கண்டிக்கவோ ஏறத்தாழ நூற்றுக்கு ஒருவர்கூட இல்லை என்று கூறலாம். ஆனால் இந்தியா முழுவதும் உள்ள இந்துக்களில் மேலே குறிப்பிட்ட பேருண்மைகளை நன்றாகத் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள் இந்தியாவில் நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு தெரிந்தவர்களுக்கு மேல் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எல்லோருமே அவரவருடைய வாழ்க்கைச்சூழ்நிலை, தேவைநிலை முதலியவற்றை எண்ணி இந்துமதத்தின் நலிவுக்கும், மெலிவுக்கும், இழிவுக்கும், அழிவுக்கும் எளிய மெய்யான காரணத்தை வாய்திறந்து வெளிப்படையாக பேசுவதே இல்லை! இதில் என்ன அவலம் என்றால், உண்மையிலேயே ஆத்திகர்களாக இருக்கின்ற பொதுமக்கள், 'இந்துமதம் மட்டும் ஏன் உலகமெல்லாம் பரவவில்லை? உள்நாட்டிலேயே நாளுக்கு நாள் நலிவடைவதும், மெலிவடைவதும், இழிவடைவதும், மெல்ல மெல்ல சிதைந்து சீரழிந்திட நேரிட்டிருக்கின்றது?' என்ற தங்களுடைய ஐயத்தைப் போக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்குரிய விளக்கங்களைத் தர அவர்களுக்கு மெய்யான காரண காரியங்களை வெளியே எடுத்துக்கூறுகின்ற



அளவிற்கு தனிமனிதர் எண்ணற்று இருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் அப்படிப்பட்டவர்களுக்கு, பொதுமேடையில் ஏறி பேசுவதற்கோ, சிறுசிறு கூட்டங்களில் விளக்கம் கூறுவதற்குரிய வாய்ப்பு வசதிகள் இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!! அதே நேரத்தில் இத்திருநாட்டிலுள்ள எத்தனையோ வாய்ப்புக்களையும், வசதிகளையும் உடைய கழகங்களோ, சங்கங்களோ, மன்றங்களோ, திருச்சபைகளோ, மடங்களோ, மதத்தின் பேராலுள்ள அரசியல் அமைப்புக்களோ தயாராக இல்லை! தயாராக இல்லை! தயாராக இல்லை!!! தயாராக இல்லவே இல்லை!!! இதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

இப்படி இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் சொந்தமான இந்துக்களே, இந்துவேதமும், இந்துமதமும் நாளுக்கு நாள் செல்வாக்கிழந்து, செயல் நலிந்து போற்றுவாரின்றி, பாதுகாப்பாரின்றி, நலிந்து, மெலிந்து, சிதைந்து, சீரழிந்துக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில்தான், இந்துவேதநாயகம், இந்துமதத்தந்தை, ஆதிசிவனாரின் வாரிசு என்றிருக்கின்ற பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி ஞாலகுரு, குருமகாசன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் செயல்பட புறப்பட்டு இருக்கிறார்கள். இந்துமத மக்களுக்கு, தங்களுடைய மதவரலாறு, வேதவரலாறு, இந்துமத நூல்கள், இந்துவேத நூல்கள், இந்துமதக்கடவுள்கள், தேவர் தேவதைகள், தெய்வங்கள், ஆண்டவர்கள், முனிவர்கள், இருடிகள், தவசிகள், ஞானிகள், மகான்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தொகையடியார்கள் என்றெல்லாம் போற்றப்படுகின்ற திருத்தொண்டர்கள், ஆத்திகர்களாகவே முழுக்க தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் என்றுள்ள அனைவரின் வரலாறுகளையும் முறையாக முழுமையாக எளிமையாக பொதுமக்களுக்கு எடுத்து விளக்குகின்ற பணியைத்தான் பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், இந்துவேத நாயகம், இந்துமதத்தந்தை என்ற உரிமைகளையும், பெருமைகளையும் பெற்ற குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் அரசயோகி கருவூறார் ஆகிய அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மேற்படி உண்மைகளெல்லாம் மக்களுக்கு பல்வேறு வடிவங்களில், பல்வேறு கோணங்களில் விளக்கி வருகின்றார், இதற்காக ஆத்திக இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை இந்து வேதத்தையும் இந்துமதத்தையும் பற்றி எண்ணிடவும், எழுதிடவும் எடுத்துப் பேசிடவும் முன்வருகின்ற நிலையை பல்வேறு முயற்சிகளின் மூலம், பல்வேறு செயல்திட்டங்களின் மூலம் மெல்ல மெலல உருவாக்கி வருகின்றார். ஆனால் இந்துமத எதிரிகளும், இந்துமதப் போலிகளும் இந்துமத துரோகிகளும், விரோதிகளும் பிறமதத்தின் கைக்கூலிகளும் கங்காணிகளும் தங்களால் எந்த அளவு பதிணென்சித்தர் மடத்தின் பணிகளை எதிர்க்க முடியுமோ அந்த அளவுக்கு பதிணென்சித்தர் மடத்தின் முயற்சிகளையும் செயல்திட்டங்களையும் முறியடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த இந்துமதப்போலிகள், காலிகள், அன்னியமத கூலிகள், கங்காணிகள் எல்லோருமே ஒட்டுமொத்தமாக ஒன்று சேர்ந்துக்கொண்டு பதிணென்சித்தர் மடத்தின் செயல்பாடுகளுக்கு பெரிய தடையாக இருப்பதோடு, பதிணென்சித்தர் மடத்தின் செயல்திட்டங்களை குறை கூற எந்த அளவுக்கு பொதுமக்களின் எதிர்ப்புகளை உருவாக்கி இருக்கிறார்கள். இருந்தபோதிலும், நான்கு யுகங்களாக இருக்கின்ற இந்துவேதத்தையும், இந்துவேத

மதமான இந்து மதத்தையும் முறைப்படி முழுமையாக விளக்கியுரைத்து இந்துக்களை இந்துக்களாக வாழச்செய்திட தனியொரு மனிதராக ஞாலகுரு. குருமகாசன்னிதானம். ஞாலகுருசித்தர். அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் முயன்று வருகிறார்கள். எனவேதான் இப்பொழுதெல்லாம் இதுபோன்று சிறிய வடிவில் நூல்களை எழுதி வெளியிடும் பணியை மேற்கொண்டுள்ளார். சொற்பொழிவுகளையும். சுற்றுப்பயணங்களையும் பெரிய அளவில் குறைத்து நிறுத்திக் கொண்டு விட்டார்.

இந்துவேதத்தை.



1. **108 பூசை மொழி நூல்கள்**
2. **48 பூசைவிதி நூல்கள்**
3. **96 தத்துவ நூல்கள்**
4. **144 செயல் சித்தாந்த நூல்கள்**

எனும் நான்கு வகையாக ஆக மொத்தம் 396 நூல்களை உருவாக்கினார்கள். இவையல்லாமல் அதிக படிப்பறிவு இல்லாத பாமர மக்கள் இந்துவேதத்தை எளிதாக புரிந்து கொள்ளவும். முழுமையாக இந்துமதப்படி வாழவும் வழி செய்வதற்காகவே மூலப்பதிணென் சித்தர்கள் இந்துமத நூல்கள் என்ற தலைப்பில் 36 நூல்களை எழுதியுள்ளார்கள். இவை கருவாக்கு. கருவாக்கியம். கருவாசகம் நூல்கள். குருவாக்கு. குருவாக்கியம். குருவாசகம் நூல்கள். தருவாக்கு. தருவாக்கியம். தருவாசகம் நூல்கள். திருவாக்கு. திருவாக்கியம். திருவாசகம் நூல்கள். அருள்வாக்கு. அருள்வாக்கியம். அருள்வாசகம் நூல்கள். மருள்வாக்கு. மருள்வாக்கியம். மருள்வாசகம் நூல்கள். அத்தர. அத்திர. அத்திற நூல்கள். சாத்தர. சாத்திர. சாத்திற நூல்கள். சூத்தர. சூத்திர. சூத்திற நூல்கள். தோத்தர. தோத்திர. தோத்திற நூல்கள். நேத்தர. நேத்திர. நேத்திற நூல்கள். வேத்தர. வேத்திர. வேத்திற நூல்கள் என்று 36 வகைப்பட்ட நூல்களாகும். இந்த நூல்களில் இந்துவாக இருக்கக்கூடியவன் எப்பொழுதும் தனது நெற்றியில் தனக்குப் பிடித்தமான மதச்சின்னத்தை அன்றாடம் காலையில் நீராடியவுடன் அணியவேண்டும். பிறகு மதியம் சாப்பிடுவதற்குமுன் முகம். கை. காலை கழுவி விட்டு நெற்றியில் மதச்சின்னத்தை அணிந்து தாம் விரும்புகிற கடவுள்களை கும்பிட்டுக் கொள்ளவேண்டும். இரவு சாப்பாட்டுக்கு முன் மீண்டும் முடிந்தால் தலையோடு தண்ணீர் ஊற்றி குளித்துவிட்டு நெற்றியில். மதச்சின்னத்தை அணிந்துகொண்டு தன் வீட்டில் உள்ள பூசையறையில் நின்று குருபாரம்பரிய மரபுப்படி தன்னை. தன் குடும்பத்தை. தன்னுடைய சுற்றத்தார்களை. தனது முன்னோர்கள். குடியிருந்த பூர்வீக இடங்களையெல்லாம் குறிப்பிட்டு ஆங்காங்கே உள்ள கடவுள்களின் பெயர்களைக் கூறி வணங்க வேண்டும். தன்னுடைய பெயர். வயது. துணைவி அல்லது துணைவன் பெயர். குழந்தைகளுடைய பெயர்கள் முதலியவற்றையெல்லாம் வாய்விட்டுக்கூறி இவர்களுக்கெல்லாம் நன்மை உண்டாகிட வேண்டும். பாதிப்புகள் எல்லாம் வராமல் நல்ல பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கவேண்டும். அதன்பிறகே தன்னுடைய பெயர். பிறந்தகிழமை. மாதம். தமிழாண்டு. மீன் இலக்கணம். இராசி முதலியவைகளை குறிப்பிட்டு தனக்கும். தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் எல்லா வகையான நலன்களும். பாதுகாப்புக்களும் வேண்டுமென்று அறிவிக்கவேண்டும்.



அதன்பிறகே பொருளாதார வசதிக்கு ஏற்ப அகல்விளக்கின் சுடரோ அல்லது கற்பூரத்தின் சுடரோ அல்லது சாம்பிராணியின் புகையோ அல்லது ஊதுபத்தி புகையோ. தான் வணங்கும் பூசைக்குரிய இடத்தில் பயன்படுத்தி. அன்றாடப் பூசைமொழி என்ற நூலில் உள்ள சத்தி காயந்திரி மந்தரம். சத்தி காயந்திரி மந்திரம். அருட்சினை மந்திறம். கற்பூரசோதி மந்திறம் என்ற நான்கையும் சொல்லவேண்டும். முடிந்தால் இந்த பூசையில் வீட்டில் உள்ள எல்லோருமே கலந்து கொள்ளலாம். இதில் எந்த தீட்டு. துலக்கு தடை என்று எதுவுமே கிடையாது. பூசையை செய்கிற ஒருவர் மட்டும் கட்டாயம் நீராடி இருக்கவேண்டும் (தலைவழியாக குளித்திருக்கவேண்டும்). மற்ற குடும்பத்தவர்கள் பூசைக்கு முன்னாள் இரண்டரை மணி நேரத்திற்குள் (அதாவது ஒரு சாமம் நேரம் முன் குளித்தோ. அல்லது கை. கால். முகம் கழுவி விட்டோ மதச்சின்னத்தை அணிந்திருந்தால் போதும்). இப்படி ஒவ்வொருவரும் தங்களையும். தங்களுடைய சுற்றத்தாரையும் இரவு படுக்கப் போவதற்கு முன்னால் தாங்கள் விரும்பும் கடவுளுக்கு தெரிவித்து வேண்டுகோள் விடுத்துக் கொள்ளவேண்டும் என்று பதிணென்சித்தர்களுடைய 48 பூசை விதிநூல்களிலும். 108 பூசைமொழி நூல்களிலும். 96 தத்துவ நூல்களிலும். 144 செயல் சித்தாந்த நூல்களிலும் ஆங்காங்கே ஒரு சில சடங்குகள். திருநாள்கள். திருவிழாக்கள். அன்றாட பூசை முதலியவற்றைப் பற்றி பேசுகின்ற இடங்களிளெல்லாம் மிகமிகத் தெளிவாக ஒவ்வொரு மனிதனும் ஆண். பெண் என்ற வேறுபாடின்றி காலை நேரம். மதிய நேரம். இரவு நேரம் என்று மூன்று நேர சாப்பாட்டுக்கு முன் எப்படி கடவுள் வழிபாடு செய்யவேண்டும் என்று விளக்கப்பட்டிருக்கின்றது. இவற்றையே சீவாத்மாவும். பரமாத்மாவும் கடைபிடிக்கவேண்டும் என்று சுருக்கமாக ஆத்திகர்களின் வாழ்க்கை நெறியை இந்துவேதம் விளக்குகிறது என்பதை திருச்சியிலுள்ள அமராவதியாற்றங்கரையில் உள்ள கரூர் பசுபதிசுவரர் கோயிலை நிர்மாணிக்க பத்தாவது பதிணென் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம். ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் கூறுகிறார்கள்.

பதிணென்சித்தர்கள் உருவாக்கிய சீவமதம்-சிவமதம்-சைவமதம் என்று படிப்படியாக பெயர் திருத்தம் பெற்று இன்றைக்கு இந்துமதம் வேறு. சைவமதம் வேறு என்று கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை எண்ணி வருந்தித்தான் கடந்த 43.73.96 ஆண்டுகளில் அறுபத்தி நான்கு (64) சிவபெருமான்கள் பல்வேறு இடங்களில் தோன்றி தெய்வீக தமிழிலேயே உரையாக சிவமதம் தான் சைவமதம் என்றாயிற்று. சீவமதம் என்றால் சிவமதம் (இந்து=விந்து=உயிரணு. உயிரின் கரு=சிவன்) இந்த இந்து என்ற சொல்லுக்கு வேதத்திலேயே 1359 சொற்களில் பொருள் கூறப்பட்டுள்ளது. எனவே சிவபெருமான் உண்டாக்கிய மதம் தான் சிவமதம். இதற்கு சீவமதம் என்ற பெயரும் உண்டு. இப்படி 64 சிவபெருமான்கள் நேரில் வந்து சொல்லியும் நம்மவர்கள் திருந்தவில்லை. இந்துமதம் வேறு சைவமதம் வேறு என்று சொல்லுகிறார்கள். இந்த உலகுக்கு இந்துமதம் ஒன்றுதான் உண்டு. அதில் மனிதனுடைய ஆவி. ஆன்மா. ஆருயிர் என்ற மூன்றும் இணைந்து - சீவன் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதற்காக. மனுநீதி நூல்கள் 18. இந்து வேதம் 4. இந்துவேத நூல்கள் 396. இந்துமத நூல்கள் 36 என்று ஏட்டறிவாக வழங்கினார்கள். இருந்தும் இந்துமதம் தான் எல்லா அண்ட

பேரண்டங்களிலும் இருக்கின்ற ஒரு மதம். இந்து மதத்தில் தான் நூறாயிரக்கணக்கில் கடவுள்கள் இருக்கின்றார்கள். அதாவது. கி.பி. 1040யில் தாத்தா. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதிணென் சித்தர். பீடாதிபதி. குருமகாசன்னிதானம். ஞாலகுரு சித்தர். காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் தம் காலத்தில் இந்துவேதப்படி. 1) 8,84,736 கடவுள்கள். 2) 33 ஆயிரங்கோடி தேவர்கள். 3) 48 ஆயிரங்கோடி இருடிகள். 4) ஆயிரங்கோடி தேவதைகள். 5) 96 ஆயிரங்கோடி கணங்கள். 6) 108 ஆயிரங்கோடி முனிவர்கள் இவர்களெல்லாம் அருளாட்சி செய்வதற்காக 1) பதிணென்சித்தர்கள். 2) பதினெட்டாம்படிக் கருப்புகள். 3) 48 வகைக் கடவுள்கள். 4) 48 வகை வழிபடுநிலையினர்கள். 5) 48 வகைச்சித்தர்கள் என்று அருளுலகத்தில் உள்ளவர்களுடைய. அருள் அளிக்கும் அருளாற்றல்களையுடைய. மனிதர்களை காப்பதற்கென்றே இருக்கின்ற அருளுலகத்தவர்களின் பட்டியலை மிகவும் தெள்ளத்தெளிவாக ஏட்டில் எழுதிச் சென்றுள்ளார். அதன்பிறகு 955 ஆண்டுகள் ஆகியுள்ள இந்த இடைவெளியில் எத்தனை கடவுள்கள் மாண்டார்கள்? எத்தனை கடவுள்கள் பிறந்தார்கள்? என்ற புதுக்கணக்கை பன்னிரெண்டாவது பதிணென்சித்தர் பீடாதிபதி ஞாலகுருசித்தர் அரசயோகிக் கருவூறார் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் தம் காலத்தில் குருபாரம்பரியம் எழுதுவார். இதையொட்டி தம் காலத்து அரசியல் செய்திகளை அரசபாரம்பரியத்திலும். தமிழ்மொழியின் நிலை. உரிமை. பெருமை முதலியவற்றையும். தங்கடைய தன்மான உணர்வு. தன்னம்பிக்கையுணர்வு. இனப்பற்றுணர்வு. இன ஒற்றுமையுணர்வு முதலியவைகள் பற்றியும். தமிழகத்திற்கு அன்னிய பண்பாடுகளும். நாகரீகங்களும் எப்படியெப்படி புகுந்து என்னென்ன செய்துக் கொண்டிருக்கின்றன? என்பது பற்றியும் இலக்கிய பாரம்பரியம் (Language and Liberature the standard of social culture the influences of the foreign culture and civilisation) எனப்படும். சமுதாய வரலாறு நூல்களையும் குறித்திடுவார். இம்மூன்று நூல்களின் குறிப்புகள் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளை விளக்கிடுபவை. எனவே அடுத்து வரக்கூடிய பதிமூன்றாவது பதிணென்சித்தர் பீடாதிபதி. மடாதிபதி எப்பொழுது தோன்றுகிறரோ. அப்பொழுது பன்னிரண்டாவது பதிணென்சித்தர் பீடாதிபதியின் காலத்தைத் தெரிந்து கொள்வார். அதன் அடிப்படையில்தான் அவர்தன் செயல் திட்டத்தை அமைப்பார். நிறுவன நிர்வாகங்களை உண்டாக்குவார்.

இப்படித்தான் கடந்த மூன்று யுகங்களிலும். ஒன்பது பதிணென்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி. 'தமிழ்மொழி உணர்வை' தமிழ்மொழி புலமையை தமிழுக்குரிய உண்மையான பெருமையை தமிழ்மொழியின் வரலாற்றை. தமிழ்மொழி தருகின்ற இந்துவேதம் பற்றிய பேருண்மைகளை. தமிழகத்தில் உள்ள கோயில்களைப் பற்றிய விளக்கங்களை. எத்தனை கோயில்கள் தமிழ்நாட்டில் இருந்தபோதிலும். அந்த கோயில்களில் அருட்சினை மொழி. பூசை மொழி. குடமுழுக்கு போன்ற திருவிழாக்களின்போது பயன்படுத்தும் மொழி. நாயன்மார்கள். ஆழ்வார்கள் போன்றவர்கள் பாடிய தமிழ்ப்பாடல்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கு தமிழர்களுடைய. தனிமனிதவாழ்வு. குடும்பவாழ்வு. சமுதாயவாழ்வு. அரசியல்வாழ்வு எந்த அளவிற்கு பன்னிரண்டாவது பதிணென்சித்தர் பீடாதிபதி காலத்தில் இருந்து வேறுபட்டிருக்கின்றன அல்லது மாறுபட்டிருக்கின்றன அல்லது



சிதைந்து சீரழிந்து போய் இருக்கின்றன முதலியவை பற்றி ஆராய்ந்து தம் காலத்தில் தமிழர்களை எப்படி விழிச்சிப் பெற செய்வது? எப்படி எழுச்சி பெறச் செய்வது? எப்படி மொழியுணர்ச்சி பெற செய்வது? எப்படி தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளும்படி செய்வது? என்னென்ன பயிற்சிகளின் மூலம் தமிழகத்தை சங்ககால தமிழகமாக மாற்றம் பெற செய்வது? இவற்றிற்காக என்னென்ன பயிற்சிகள் வழங்கப்படவேண்டும் என்பது பற்றி பதிமூன்றாவது பதிணென்சித்தர் பீடாதிபதி அவசரமின்றி முடிவெடுப்பார்.

இதைப்போலத்தான் இந்த கலியுகம் எனும் நான்காவது உகம் பிறந்து 5,096 ஆண்டுகள் ஆகின்றன. (ஆங்கில ஆண்டு கி.பி. 1995 முடிய கணக்கிடப்பட்டிருக்கின்றது). இந்த கலி உகத்தில்தான் பத்தாவது பதிணென்சித்தர் பீடாதிபதி கி.மு. 100 முதல் கி.பி. 150 (கலி உகம் 3001 முதல் 3251) முடிய வாழ்ந்த அவர் தனது வாழ்வியல் அனுபவங்களை. தான் கடைப்பிடித்திட்ட செயல்முறைகளை. தாம் உருவாக்கிய நிறுவன நிர்வாகங்களை. தாம் உருவாக்கிய அருட்பட்டத்தவர்களை தம்மிடம் சித்தி பெற்ற அடியான்கள். அடியாள்கள். அடியார்கள் பற்றிய புள்ளி விவரங்களை தனக்கு ஏற்பட்ட வெற்றி தோல்விகளைப் பற்றிய ஆய்வுரைகளை நடுநிலையில் இருந்து. குருபாரம்பரியம். இலக்கிய பாரம்பரியம். அரச பாரம்பரியம் என்று மூன்று பெரிய வரலாற்றுக் காலக்கணக்கீடு மாறாமல் விளக்கி எழுதியுள்ளார். (All the matters given with a clear chronological basis).

இவருக்குப் பிறகு தோன்றிய அதாவது. இந்த கலியுகத்தை பொறுத்தவரை முதல் பதிணென்சித்தர் பீடாதிபதியாகவும். பீடாதிபதிகளின் எண்ணிக்கையின்படி பத்தாவது பதிணென்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம். ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரை கருவூரார் அவர்கள் தம் காலத்தில் தனிமனித வாழ்வு. குடும்பவாழ்வு. சமுதாயவாழ்வு. அரசியல்வாழ்வு முதலியவற்றில் எந்த அளவு தமிழ்மொழி பண்பாட்டின் கூறுபாடுகளும் நாகரீகத்தின் பண்பாட்டு கூறுபாடுகளும். எந்தளவுக்கு வளமாக இருந்தன என்பது பற்றி மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். அதில் இந்த உலகுக்கு முதல் வேதமாக மூலவேதமாக கடவுள்களாலேயே எழுதப்பட்ட முழுவேதமாக இருக்கின்ற இந்துவேதத்தை அந்த அளவு தமிழர்கள் நம்பி பின்பற்றுகிறார்கள் என்பதைப் பற்றிய குறிப்புகள். வருத்தத்தோடு வேதனையோடு ஒன்பதாவது பதிணென்சித்தர் பீடாதிபதியான சித்தர் வைகையாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் எழுதி சென்றுள்ளார். இவரே முதல் மூன்று உகங்களில் கடைசியாகத் தோன்றிய பதிணென்சித்தர் மடாதிபதி. பீடாதிபதி. ஆனால் இவர் வெளிப்படையாகவே தமது தோல்விகளை எல்லாம் தம்முடைய அடியான்கள். அடியாள்கள். அடியார்கள் முதலியவர்களுக்கு உணர்த்தியதோடு தாம் எழுதிய குருபாரம்பரியம். இலக்கிய பாரம்பரியம் (தமிழ்மொழி பற்றியும். தமிழர் சமுதாயம் பற்றியும். எழுதப்பட்டுள்ள நூல்) தமிழர் அரசபாரம்பரியம் என்ற மூன்று நூல்களிலும் மிகுந்த வேதனையோடு எழுதிச் சென்றுள்ளார்.

ஒன்பதாவது பதிணென்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் வைகையாற்றங்கரை கருவூரார் காலத்தில் கன்னியாகுமரி முனை

முதல் வடஇமயமலையின் விளிம்பு வரை தமிழ்மொழிதான் ஆட்சிமொழியாக அருளுலகிலும், பொருளுலகிலும் இருந்திட்டது என்பது பற்றிய விளக்கங்கள் இவரால் தரப்பட்டிருக்கின்றன. மகாபாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் இமயமலைப் பகுதிகளையும், யமுனை கங்கையாற்றுப் பகுதிகளையும்,



**'ஓர் ஐவரோடு ஈரைந்து பதினென்பர்**
**உதன்று எழுந்து போருக்கெழுந்த காலை**
**இருவருக்கும் போற்றாது உணவளித்த**
**சேரன் செங்குட்டுவன் நெடுஞ்சேரலாதன்'**



என்று பதிற்றுப்பற்றில் புகழ்ந்து பேசப்பட்ட சேரன் செங்குட்டுவன் நெடுஞ்சேரலாதன் காலத்தில்தான் தமிழ்மொழியோடு, பிறநாட்டு மொழிகள் வந்து கலக்க ஆரம்பித்தன. அதன்மூலம் பல புதிய மொழிகள் தோன்றின. ஆனால் தமிழர்களிலேயே கணிசமான அளவான வெவ்வேறு மொழியினராக மாறினார்கள். அப்படி மாறியதோடு அல்லாமல், தமிழ் அகப்பண்பாட்டையும், புறநாகரீகரத்தையும் அடிப்படையாகக் கொண்டே புதியமொழிகளுக்கு என்று தனித்த அகப்பண்பாடுகளையும், புறநாகரீகங்களையும் உருவாக்கிக் கொண்டார்கள். இதனால் 'இமயம் முதல் குமரி வரை தமிழ்மொழி வைத்து', 'உலகாண்ட சேரன் செங்குட்டுவன் நெடுஞ்சேரலாதன் என்ற சிலப்பதிகார வரிகளும், பதிற்று பற்று வரிகளும் சேரன் செங்குட்டுவன் நெடுஞ்சேரலாதன் காலம் வரை இந்தியா முழுவதும் தமிழ்மொழி எனும் ஒரே ஒரு மொழியின் மூலம் தான் எல்லா வகையான சமய, சமுதாய, அரசியல் நிகழ்ச்சிகள் அனைத்தும் நிகழ்ந்துக் கொண்டிருந்தன என்ற உண்மை தெரிய வருகின்றது. அத்துடன் இவனுடைய காலத்தில்தான் பிறநாடுகளிலிருந்து கைபர், போலன் என்ற இமயமலை கணவாய்களின் வழியாக அன்னியர்கள், மாற்று வேதத்தார்கள், வேற்று நாகரீகத்தார்கள் <u>தமிழ் இந்தியாவுக்குள்</u> நுழைந்தார்கள் என்ற வரலாறு மிகத் தெளிவாக விளங்குகிறது; விளக்குகின்றது. இதுபற்றி பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது குருபாரம்பரியம், இலக்கியபாரம்பரியம், அரசியல்பாரம்பரியம் எனப்படுகின்ற மூன்று வரலாறு நூல்களிலும் மிகத்தெளிவாக ஏராளமான செய்திகளை குறிப்பிடுகின்றார். குறிப்பாக 'இமயவரம்பன்' என்ற சிறப்பு பெயருக்குரிய சேரமன்னன் (இந்தியாவில் பாண்டியன், சோழர், சேரன் என்ற மூன்று முடியுடை மூவேந்தர்கள் தான் இருந்தார்கள்) என்ற அரசபரம்பரை பாண்டியருக்கும் சோழருக்கும் ஏற்பட்ட உறவுமுறைகளில் பிறந்தவர்களே. பாண்டிய, சோழ அரச பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள் எனப் பொருள்பட சேரர் என்ற பெயரில் குமரி முதல் இமயம் வரை இருந்த மலைநாடுகள், மலைப்பகுதிகளையும், மலையும், மலைச்சார்ந்த காடுகளையும் உடைய குறிஞ்சி நிலத்தை ஆளுகின்ற பெரும் வேந்தர்கள் என்ற நிலையில் சேரர்கள் மலைநாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். இவர்கள் தோன்றுவதற்கு முன்னால் மலையும், மலைச்சார்ந்த காடுகளையும் உடைய குறிஞ்சி நிலத்தையும், காடும், காடுகளையும் சார்ந்த முல்லை நிலத்தையும், வயலும் வயல் சூழ்ந்த பகுதிகளையும் உடைய மருதநிலத்தையும், கடலும், கடலைச்சார்ந்த நெய்தல் நிலத்தையும் பாண்டியர்கள் (ஆதிசிவனாரின் குருவழிவாரிசாகத் தோன்றிய கருவூரார்கள்) பாண்டிய அரசு என்ற பெயரால் ஆண்டு வந்தார்கள். ஆனால்,



ஆறாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், குமரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களுக்கு முதலில் பெண் குழந்தையும், பிறகு ஆண்குழந்தையும் பிறந்ததால் முதல் பெண்ணை பதினெண்சித்தர் வகையிலுள்ள சித்தர் காகபுசுண்டர் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்து இந்தியாவின் சரிபாதியை சோழநாடாக தன்னுடைய மகள் சோழமாதேவி எனும் சோழியாவின் பெயரில் சோழ அரச பாரம்பரியத்தை உருவாக்கினார். இந்த மாபெரும் இரண்டு அரச குடும்பத்தார்களுக்கும் தோன்றிய அரச குடும்பத்தார், இருவரையும் சேர்ந்தவர்கள், இரண்டு அரச பாரம்பரியத்தையும் சேர்ந்தவர்கள் என்ற பெயரில் சேர அரச பாரம்பரியம் என்ற ஒன்றைத் தோற்றுவித்தார்கள். இப்படி மூன்று பெரிய அரச பாரம்பரியங்கள் முறையே மீன் சின்னமுடைய கொடி பாண்டியனுக்கென்றும், புலிச்சின்னத்தையுடைய கொடி சோழனுக்கு என்றும், மலைப்பகுதிகளிலேயே பயன்படக்கூடிய வலிமையான, நுட்பமான போர்கருவியான வில்லும், அம்பும் அதாவது வில்லை வளைத்து நாணேற்றி அதில் அம்பை பூட்டிய நிலையில் உள்ள சின்னத்தையுடைய கொடியை சேரரருக்கும் உரியது என்று ஏழாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுருசித்தர், குருமகாசன்னிதானம் கபாடபுரத்து கருவூரார் அவர்கள் வரையறை செய்து முடிவு கட்டினார். இந்த மூவர்தான் 'முடியுடைய மூவேந்தர்கள்' என்ற பெருமைக்குரியவர்களாக இன்று வரை கருதப்படுகிறார்கள். அதாவது, மூன்று மரபைச் சேர்ந்த மன்னர்கள் மட்டுமே தலையில் மணிமுடி (அரசகிரீடம்) வைத்துக் கொள்ளலாம். அதற்காக முடிசூட்டு விழா என்ற ஓர் விழா ஒவ்வொரு மன்னனும் ஆட்சியில் பொறுப்பை ஏற்கும்பொழுது. அதாவது ஒவ்வொரு பரம்பரை மன்னனும் ஆட்சியில் பொறுப்பை ஏற்கும்பொழுதும் மூவேந்தர் பரம்பரையை சேர்ந்த மற்ற இரண்டு முடியுடைய வேந்தர்களையும் வரவழைத்துதான் இந்த திருவிழா கொண்டாடப் படவேண்டும் என்ற விதியை கட்டாயமாக கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று ஞாலகுரு சித்தர் கபாடபுரத்து கருவூரார் அவர்கள் தமது குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரசபாரம்பரியம் என்னும் மூன்று நூல்களிலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஏனென்றால் குமரிமுனை முதல் இமயத்தின் விளிம்பு வரை அதாவது, ஆயிரக்கணக்கான கல்தொலைவு குமரிமுனை முதல் இமயத்தின் விளிம்புவரை வாழ்ந்திட்ட தமிழர்களுக்கிடையே இந்த மூன்று முடியுடைய மூவேந்தர்களின் அரசாணைக்குக் கட்டுப்பட்டு என்றென்றும் வாழ்ந்திடக்கூடிய சமய, சமுதாய, அரசியல் பழக்கம் நிலையாக நின்றிடும். தொன்று தொட்டு இந்தியா முழுவதும் உள்ள தமிழர்கள் முடியுடைய மூவேந்தரையும் ஏற்று பணிந்து கட்டுப்பாட்டுடன் வாழ்ந்திடுவார்கள். இப்படியல்லாமல் முடியுடைய மூவேந்தர்களையும், ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்ளுவது என்ற நிலை உருவாக விடுமேயானால் இந்தியாவின் சமய, சமுதாய, அரசியல் துறைகளில் தமிழர்கள் அல்லாதவர்கள் புகுந்திடுவார்கள். அது காலப்போக்கில் தமிழர்களின் தனிமனித வாழ்வு, குடும்பவாழ்வு, சமுதாயவாழ்வு, அரசியல்வாழ்வு என்பனவற்றை பாதித்து விடும்.

அனாதி காலத்திலேயே தோன்றிட்ட சிவபெருமான்கள், இளமுறியாக் கண்டத்து மக்களில், உடல் வண்ணம் அங்க அமைப்புகள் உருவத்தோற்றங்கள், உருவ உயரங்கள், உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள் முதலியவைகளால்

இளமுறியாக் கண்டத்தின் மக்களை எண்ணூறுக்கும் (800) மேற்பட்ட பிரிவினர்களாக பார்க்கமுடியும். தென் இமயமலை கிழக்கு இமயமலை, மேற்கு இமயமலை என்ற மூன்று இமயமலைகளிலும், வாழ்வியல்களிலும் தோற்றத்திலும், சமுதாயப்பாட்டிலும் உலகியல் நாகரீகத்திலும் சுமார் நூறு வகைப்பட்டவர்கள் இருந்தார்கள். அடுத்து மலையும், மலைச்சார்ந்த காடுகள் எனும் குறிஞ்சி நிலத்து பகுதி மக்களுக்கிடையிலும் காடும், காடு சார்ந்த முல்லை நிலத்து மக்களுக்கிடையிலும், வயலும் வயல் சார்ந்த மருதநிலத்து பகுதி மக்களிடையிலும், கடலும், கடல்சார்ந்த நெய்தல் நிலத்துப்பகுதி மக்களிடையிலும் எனம் நான்கு வகைப்பட்ட பிரிவுகளையும் சேராத பெரும் காடுகளையும், மணல் பகுதிகளையும், நீர்வளமில்லாத வறண்ட பகுதிகளையும், ஆங்காங்கே பாலைநிலம் அல்லது பாலைவனம் என்ற பெயரில் குறிப்பிட்ட இடங்களில் வாழுகின்ற மக்கள் உடல் தோற்றத்திலும், அங்க அளவுகளிலும், உடல் வண்ணத்திலும், உள்ள உணர்வுகளிலும், புறநாகரீக கூறுபாடுகளிலும் நூறு வகையினருக்கு மேல் இருந்திட்டார்கள். இப்படி பார்க்கும்பொழுது வடஇமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணல்பரப்புவரை எண்ணூற்றுக்கும் மேற்பட்ட தோற்ற மாற்ற உருவமாற்ற வேறுபாடுகளை பெற்றிருந்த மக்கள் எண்ணூறுக்கும் (800) மேற்பட்ட வகையினர்களாக இருந்திட்டார்கள். ஆனால் இவர்கள் அனைவருமே தமிழ்மொழி பேசுபவர்களாகவே இருந்திட்டார்கள். அதாவது புதிய புதியதாகத் தோன்றிய மொழிகள் இந்தியா முழுவதும் ஆட்சி செய்திட்ட தமிழ்மொழியின் செல்வாக்கை ஒன்றும் செய்யவில்லை. இதனால், குமரிமுனை முதல் இமயமலைவரை இருந்த காடுகளையும், மலைச்சார்ந்த இடங்களையும் உடைய குறிஞ்சி நில மக்களை முடியுடைய மூவேந்தர்கள் மன்னர்களான சேரமன்னர்கள் எளிதாக ஆட்சி செய்ய முடிந்தது. இதேபோல் காடும், காடுப்பகுதிகளைச் சார்ந்த முல்லை நிலத்தையும், வயலும் வயலைச்சார்ந்த மருதநிலப்பகுதிகளையும் பாண்டிய மன்னர்கள் எளிதாக ஆட்சி செய்ய முடிந்தது. கடலும், கடலைச்சார்ந்த பகுதிகளான நெய்தல் நிலப்பகுதிகளையும் ஆங்காங்கே இருந்த பாலைவன பகுதிகளையும் சோழமன்னர்கள் எளிதாக ஆளமுடிந்தது. மேலும் இந்த முடியுடைய மூவேந்தர்களுக்கிடையில்தான் திருமணத் தொடர்பு நிகழ்ந்து வந்திட்டது என்பதால் இந்தியாவை மூவேந்தர்களும் நல்ல அமைதியான சூழ்நிலையில் ஆட்சி செய்திட்டார்கள்.

இப்படி தமிழ்மொழியின் மூலம் எண்ணூறுக்கும் மேற்பட்ட தோற்றாற்ற, உருவ வேறுபாடுகளை உடைய தமிழர்கள் அனைவரும் தமிழ்மொழியால் கட்டுப்பட்டு அகப்பண்பாடுகளிலும், புறநாகரீகங்களிலும், சமய, சமுதாய திருநாள்களிலும், திருவிழாக்களிலும், சடங்குகளிலும் ஒரே மாதிரியான வாழ்க்கையே வாழ்ந்திட்டார்கள். அதற்கு



1. மனுநீதி நூல்கள் - 18யும்
2. வேதங்கள் - 4யும்
3. இந்துவேதநூல்கள் - 396யும்
4. இந்துமத நூல்கள் - 36யும்
5. இந்துவேத சூலகங்கள் எனப்படும் சுலோகங்கள் 4, 42, 368ம் மிகச்சிறப்பாக தமிழர்கள் அனைவரையும் ஒன்றுகூடி, ஒற்றுமையோடு எல்லா வகையான



திருமணத்தொடர்புகளையும் எல்லோரும் சமமாக எவ்வித வேறுபாடின்றி அவரவர் விருப்பம்போல் நிகழ்த்திக் கொண்டார்கள். இப்படி இந்துமதம் தான் இந்தியா முழுவதும் இருந்த தமிழர்களையும் இந்தியாவை சுற்றியிருந்த அதாவது இளமுறியாக் கண்டத்தைச் சுற்றியிருந்த தீவுகளிலும், குமரிக்கண்டத்தில் வாழ்ந்திட்ட மக்களையும், இந்துமதம் தமிழர்களோடு ஒன்றிவாழ செய்திருந்தது. அதாவது, இந்துவேதமதமான இந்துமதம் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும்', 'உலக சமத்துவ சகோதரத் தத்துவ உலக பொதுவுடமை சமுதாயத்தையும்' 'உலக அருளாட்சி'யை ஒப்புக்கொண்டு அந்தந்த அரசுகள் அவரவர் எல்லைகளை மீறாமல் அடக்கமாக வாழவும் வழிசெய்தது. இதனால்தான், எந்தவிதமான போரும், சண்டை சச்சரவுகளும் உலகில் எழாமல் பாதுகாக்கும் சத்தியாக இந்துவேதம் இந்தமதம் செயல்படமுடிந்தது. அதாவது, மூன்று கடல்கோள்களால் குமரிக்கண்டத்தின் பெரும்பகுதி சிதைந்தபொழுதும் இன்றைக்கு இருக்கும் இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி பரப்புவரை இருக்கின்ற நாடு தமிழ்நாடுதான். இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்குமுரிய நாடுதான் 'இந்து' என்ற அழகான பொருளாழமிக்க சொல்லுக்கு நிகண்டில் (அகராதி=Dictionary) 1359 சொற்களில் பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. எனவேதான், இந்து என்ற தெய்வீக முத்தமிழ் மொழிச்சொல்லைப் பயன்படுத்தியே மூவேந்தர்களும் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தி ஆண்டிட்டார்கள். மூன்று கடல்கோள்களில் குமரிக்கண்டத்தின் பெரும்பகுதி தண்ணீருக்குள் அமுந்திட, கடலுக்குள் இருந்த பல புதிய பகுதிகள் மேலே எழுந்து வந்தன. இதனால்தான், இந்த உலகமே குமரிக்கண்டம் என்று ஒரே கண்டமாக இருந்த நிலைமாறி ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா என்று ஐந்து (5) கண்டங்கள் மிகுந்த இடைவெளி விட்டு புதியதாகத் தோன்றியிருக்கின்றன. ஆனால், இந்த கண்டங்கள் பெரிய கண்டங்களாக ஆவதற்கு முன்னால் சிறிய சிறிய தீவுகளாக இருந்தன. எனவேதான் இந்த சிறுசிறு தீவுகள் பெரிய கண்டங்களாக கடலுக்குள் இருந்து வெளிப்பட்டவுடன் குமரிக்கண்டத்தில் இருந்த தமிழர்கள் அவரவர்களிடமிருந்த நாவாய், கட்டுமரம், படகு, ஓடம், கப்பல் எனப்படும் பலவித சாதனங்களின் மூலம் உலகம் முழுவதும் புதியதாக தோன்றிய கண்டங்களுக்கு சென்றார்கள். இதனால்தான், மத்திய அமெரிக்காவில் உள்ள மேயா நாகரீகமும், ஆப்பிரிக்கா கடற்கரையிலுள்ள ஆப்பிரிக்கா நாகரீகமும், மற்ற ஐரோப்பா கண்டங்களில் உள்ள நாகரீகமும், ஆஸ்திரேலியா நாட்டின் பெரும்பகுதிகளில் வசிக்கின்ற ஆதிவாசிகளின் நாகரீகமும், தமிழர் நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்த உலகில் இளமுறியாகண்டம் மூன்றுமுறை கடலுக்குள் அமிழ்ந்தபொழுது இன்றைக்கு இருக்கின்ற விந்தியமலைக்கு வடக்கே இருக்கின்ற வடஇந்தியா என்ற பகுதியும் அதையொட்டி வடக்கே, கிழக்கே, மேற்கே இருக்கின்ற ஆசியா கண்ட பகுதிகளிலும் தமிழர்கள் எனும் திராவிடர்கள் குடியேறினார்கள் என்பதுதான் உண்மை. அதாவது புதிய, புதியதாக தோன்றிய நிலப்பகுதிகளில் அனைத்திலுமே குடியேறியவர்கள் தமிழர்கள்தான். இதனால் இந்த உலகில் எந்த கண்டத்தில் வேண்டுமானாலும் சரி 'பூர்வீககுடிகள்' 'ஆதிவாசிகள்' 'பழங்குடியினர்' 'மலைசாதியினர்' முன்னேற்றம் இல்லாத தாழ்த்தப்பட்டோர் என்றெல்லாம்

குறிப்பிடப்படுகிறவர்கள் தமிழர்கள்தான். ஏனென்றால் இன்றைக்கும் உலகமுழுவதுமுள்ள பல்வேறு வகையான மக்களின் தோற்றப் பொழிவுகளையுடைய மக்கள் அனைவருமே தமிழகத்தில் தான் வாழுகிறார்கள். அதாவது இன்றைக்கு தமிழ்நாட்டில் வாழுகின்ற மக்களில் எத்தனை வகையான தோற்றப்பொழிவுடையவர்கள் இருக்கிறார்கள் என்று ஆராய்ந்தால் இந்த உலகில் உள்ள எல்லா கண்டத்து மக்களின் முகப்பொலிவும், தோற்றப்பொலிவும், வடிவமைப்பும் உடையவர்கள் தென்னிந்தியாவுக்குள் இருக்கிறார்கள். அதாவது இன்றைக்கு கர்நாடகம், ஆந்திரம், மலையாளம் என்று 3 தனி மாநிலங்கள் இருந்தாலும் இந்த மக்கள் அனைவரும் தமிழர்களே. இவர்கள் பேசுகின்ற தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகள் அனைத்துமே தமிழ்மொழியிலிருந்து தோன்றியவைதான் என்ற உண்மை இந்த உலகின் பூர்வீககுடிகள் இளமுறியா கண்டமெனும் குமரிக் கண்டத்தைச் சேர்ந்த தமிழர்களே ஆவர்கள் என்ற பேருண்மையையே விளக்குகிறது. அதாவது **தமிழர்கள் தான் உலகம் முழுவதும் உள்ள பூர்வீக குடிகள். இதேபோல் உலகம் முழுவதும் உள்ள அனைத்து மதங்களும், வேதங்களும் தமிழர்களுடைய இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அடிப்படையகா கொண்டவை தான் என்பதில் ஐயமேயில்லை! இதற்காக உலக மொழிகளையெல்லாம் ஒப்புநோக்கு ஆய்வுகள் நிகழ்த்தினால் இந்த உலகில் உள்ள எல்லா மொழிகளும் தமிழ்மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் தோற்றுவிக்கப்படுகின்றன என்ற பேருண்மை விளங்கிடும்.**

இதேபோல், இந்த உலகில் இதுகாறும் தோன்றிட்டதாக கூறப்படுகின்ற மதங்கள் அனைத்தையும் ஆராய்ச்சி செய்தால் இந்த உலகமுழுவதும் இந்துவேதமும், இந்துவேதமான இந்துமதமும்தான் ஒரு காலத்தில் பரவியிருந்தது. இதுபற்றி இருக்குவேதம், அசுரவேதம், அதர்வணவேதம், யாமவேதம் எனும் நான்கு வேதங்களிலுமே முதல் (10) பத்து காண்டங்களுக்குள் பல இடங்களில் திருப்பி திருப்பி விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

'இந்துவேதம் எனப்படும் ஆலமரத்தின் விழுதுகளாகவோ, கிளைகளாகவோ, இலைகளாகவோதான் பல வேதங்கள் தோன்ற முடியும்'

இருக்கு காண்டம் - 5, மண்டலம் - 7 நாள் உரைக்கோவை வாசகம் - 17, 18, 19

இருக்கு காண்டம் - 7, மண்டலம் - 3, நாள்உரைக்கோவை வாசகம் - 1, 3, 9, 18, 27, 33, 48, ...

இதேபோல் மேலேக் குறிப்பிட்ட காண்டம், மண்டலம், நாள் உரைகோவை வாக்கிய, வாக்கு, வாசகம் முதலிய எண்ணிக்கைக்குரிய வாசகங்களில்தான் அசுரவேதம், அதர்வாண வேதம், யாம வேதம் என மூன்று வேதங்களிலும் இந்து வேதத்திலிருந்துதான் மற்ற வேதங்கள் தோன்றமுடியும் என்ற கருத்து பல்வேறு சொற்றொடர்களின் அமைப்புகளில் பல்வேறு உதாரணங்களோடு விளக்கப் பட்டிருக்கின்றன. அதாவது, முதலில் தோன்றியது இருக்குவேதம். இது ஆதிசிவனாரால் கூறப்பட்டது. இந்த வேதத்தை எளிமைப்படுத்தி அவரது மகனான முருகன் அசுரவேதம், அதர்வாணவேதம், யாமவேதம் என்ற மூன்று வேதங்களை உண்டாக்கினார். இவையெல்லாவற்றிலும் இருக்கு வேதத்தில் இருப்பது போன்றே ஒவ்வொரு வேதத்திலும் காண்டங்கள் 48; ஒவ்வொரு காண்டங்களிலும் மண்டலங்கள் 48; ஒவ்வொரு மண்டலங்களிலும் நாள் உரை



கோவை வாசகத்திற்கு 48; என்ற பகுப்பு கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இருக்குவேதத்தில் கூறப்படுகின்ற மிகச்சிறந்த கருத்துக்களையெல்லாம் உடைய காண்டம், மண்டலம், நாள் வாசக மலர் ஒரே மாதிரியாக அதாவது, இருக்குவேதத்தில் எந்த காண்டத்தில், எத்தனையாவது மண்டலத்தில், எத்தனையாவது நாள் வாசக மலராக குறிக்கப்பட்டிருக்கின்றனவோ அதேமுறைப்படி இருக்குவேதத்தின் கருத்துக்களை அந்தந்த வேதத்திற்கு ஏற்றபடி மேலும் பல புதிய விளக்கங்களோடு விளக்கியுரைக்கிறார் முருகப்பெருமான்.

அண்ட, பேரண்டங்கள் முழுவதும் இருக்குவேதம் (ரிக்வேதம்) என்ற ஒன்றுதான் இருக்கிறது. ஆனால் விரும்புகின்ற மக்கள் தங்களுடைய விருப்பத்திற்கேற்ற வேதங்களை மட்டும் தெரிந்து கொண்டால் போதும் என்ற நோக்கத்தில்தான் இருக்குவேதத்திலிருந்து அசுரவேதம், அதர்வணவேதம், யாமவேதம் என்ற மூன்று வேதங்களையும் உருவாக்கினார் முருகப்பெருமான். இதில் இருக்குவேதம் முழுதும் கையாளப்படவில்லை. இருக்குவேதத்தில் பாதிக்கு மேல் அப்படியேதான் இருக்கின்றன. அதாவது, சிவபெருமானின் அனுமதி கிடைக்காததால் இருக்குவேதம் பாதிக்குமேல் அப்படியே இருக்கின்றது. மீதிப்பாதியைத் தான் மூன்று (3) தனி வேதங்களாக முருகப்பெருமான் உருவாக்கினார். அதனால்தான் வேதங்கள் நான்கு என்று கூறப்படுகின்றன. மேலும் முருகப்பெருமான் தன் தந்தையான ஆதிசிவனாரிடம் தேவையான அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டு, விண்ணுலக ஐம்பெரும் குழுவினரையும், மண்ணுலக ஐம்பெரும் குழுவினரையும் துணையாக வைத்துக்கொண்டு தன்னுடைய 32வது வயது முதல் 36வது வயது வரை அதாவது நாற்பத்தெட்டு மாதங்கள் (48), கோடிக்கணக்கான கடவுள்கள், வழிபடுநிலையினர்கள், பதினெண் சித்தர்கள், பதினெட்டாம்படிக்கருப்புகள், சித்தர்கள், தேவர் தேவதைகள், கணங்கள், முனிவர்கள் முதலியவர்களின் துணையோடு கருத்துப் பரிமாற்ற கலந்துரையாடல்களையும், ஆய்வு மன்றங்களையும் நிகழ்த்தி தான் முருகப்பெருமான் மூன்று வேதங்களையும் எழுதினார். இந்த ஆய்வுமன்றத்தின் தலைவராக தன்னுடைய பார்வதி என்ற மண்ணுலக மங்கையோடும், கங்கை என்ற வானுலக மங்கையோடும் ஆதிசிவனார் அமர்ந்திருந்தார். அவருடைய முழு ஒப்புதலைப் பெற்றுதான் மூன்று வேதங்களும் எழுதப்பட்டன. எனவேதான் ஆதிசிவனார் அருளிய நான்கு வேதங்கள் என்று கூறும் வழக்கம் இருக்கின்றது. மேலும், ஆதிசிவனார்தான் அசுரவேதம் எப்படி கற்பிக்கப்படவேண்டும்? அதர்வணவேதம் எப்படி கற்பிக்கப்படவேண்டும்? யாமவேதம் (சாமவேதம்) எல்லா பொதுமக்களுக்குமே அவரவரின் அறிவாற்றலுக்கும், செயலாற்றலுக்கும் ஏற்ப கற்றுக் கொடுக்கவேண்டும். அவர்கள்தான் ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி என்ற ஐந்தும் செய்து நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்களையும் புதுப்பித்தார்கள். மேலும், அவர்கள்தான் பொதுமக்களுக்கு குண்டலினி, குண்டளினி, குண்டழினி என்ற மூன்றையும், ஓகாசனம், யோகாசனம், மோகாசனம், போகாசனம் என்கிற நான்கையும் முறைப்படி மக்களுக்கு கற்பித்து, மக்களில் மகான்கள், ஞானிகள், தவசிகள், சித்தர்கள், அடிகளார்கள் முதலியவர்கள் தோன்றும்படி செய்யமுடியும். எனவே யாம (சாம) வேதத்தை அக்கறையும், ஆர்வமுள்ளவர்களுக்கு எல்லாம் கற்பிக்கவேண்டும். அவர்கள் தாங்கள்

கற்றவற்றை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழ், பதவி முதலியவைகளுக்கா தவறாக பயன்படுத்தினால் அவர்கள் யாமவேதத்தாலேயே தண்டிக்கப்பட்டு விடுவார்கள். யாமவேதம் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கலாம் என்பதால், அதை சாதாரணமாக மதிப்பிடவேண்டாம். அது உறைக்குள் இருக்கும் போர்வாள் போன்றது. எனவே, யாம வேதத்தை அச்சம், கூச்சம், இச்சை, வெட்கம் முதலியவை இல்லாமல் யாமவேதத்தில் கூறியுள்ளபடி பூசைகளை செய்கிறவன் உறுதியாக வெற்றி பெறுவான். இதில் மாந்தரீகம், தாந்தரீகம், ஏந்தரீகம் என்ற மூன்று மட்டும் மிகவிரைவில் சத்திகளையும், சித்திகளையும் தரக்கூடியவை. ஆனால் இவற்றை சாதாரணமான மானுட உணர்வுகளுக்காக மட்டும் பயன்படுத்தினால், பயன்படுத்துகின்றவர்கள் எந்த நேரத்திலும் எத்தகைய ஆபத்தையும் சந்திக்க நேரிடும். அதாவது, மேற்படி மாந்தரீகம், தாந்தரீகம், ஏந்தரீகம் பூசைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற பெண்களுக்கும் ஓரளவு அருளாற்றலை தானமாக கொடுத்து மீதியுள்ளவற்றைத்தான் மேற்படி பூசைகளை செய்கிறவன் உடனுக்குடன் எடுத்தோ அல்லது தேவைக்கேற்ப அவ்வப்பொழுது எடுத்தோ செயல்படலாம். இந்த உரிமை மேற்படி பூசைகளை செய்கின்ற அருளாளனைப் பொறுத்ததே. பூசைக்கு பயன்பெற்ற பெண்கள் தங்கள் விருப்பம் போல் தங்களின் ஆற்றல்களை பயன்படுத்திக் கொள்ளமுடியாது. அதாவது, பூசைக்கு பயன்பட்ட பெண்கள் குரு துரோகியாகவோ, குருவிரோதியாகவோ, குருவின் எதிரியாகவோ செயல்பட இயலாது! செயல்பட முடியாது! இப்படி யாராவது செயல்பட முயன்றாலும் அவை பெரிய இழிவை, அழிவை தரக்கூடியவைகளாக ஆகிவிடும். அதாவது பதிணெண்சித்தர் பீடாதிபதிகளுடைய பூசைக்காக பயன்பட்ட பெண்கள் அவ்வளவு சிறப்பாக செயல்பட்டிருந்தாலும் சரி அவர்களுக்கென்று தானமாக உரிமையாக தரப்படுகின்ற சத்தியை அப்பெண்கள் விருப்பம்போல் பயன்படுத்திடமுடியாது. குரு துரோகியாகவோ, குரு விரோதியாகவோ, குரு எதிரியாக செயல்படக்கூடிய பெண்கள் அருளுலகத்தவர்களாலேயே கடுமையாக தண்டிக்கப்பட்டு துன்புற நேரிடும். ஆனால் பதிணெண்சித்தர் பீடாதிபதி என்பவர்கள் அருட்கொடை வள்ளல்கள், ஞான வள்ளல்கள், ஞானத்தந்தை என்ற பட்டத்துக்குரியவர்கள். எக்காரணத்தை முன்னிட்டும் பதிணெண்சித்தர் பீடாதிபதிகள் பிறரை தண்டிக்க விரும்பமாட்டார்கள். வேண்டுமானால் கண்டிப்பார்கள். இதனால்தான் நாட்டில் தைரியமாக மந்தர, மந்திர, மந்தறவாதிகள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தான் 1) பூதம், 2) காற்று, 3) கறுப்பு, 4) பேய், 5) பிசாசு, 6) பில்லி, 7) சூன்யம், 8)ஏவல், 9) செய்வினை, 10) வைப்பு, 11) கழிப்பு, 12) மருந்து, 13)கண்ணேறு என்பவைகள் மனித சமுதாயத்திலிருந்து முற்றிலும் ஒழிக்கப்படாமல் இருக்கின்றன. இந்த மந்தர, மந்திர, மந்திறவாதிகளை திருத்தவே முடியவில்லை, தண்டிக்கவும் இயலாதவர்களாக இருக்கின்றார்கள். பதிணெண்சித்தர் பீடாதிபதிகள், இந்த இயலாமையாலும் பல்வேறு வகையான உலகியல் குடும்ப நடைமுறைச் சிக்கல்களால் பதிணெண்சித்தர் பீடாதிபதிகள் எதையும் செய்ய இயலாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். இதை பயன்படுத்திக் கொண்டு சமுதாயத்திற்கு கேடு செய்யும் மந்தர, மந்திர, மந்திறவாதிகள் செயல்படுகிறார்கள். மேலும், இந்த மூன்று வகைப்பட்ட பூசைகளுக்கும் பயன்பட்ட பெண்கள் குருதேவரை



மிரட்டவோ, குருதேவரை தங்களின் அடிமைகளாகவோ வைத்துக்கொள்ள இயலாது. அதாவது, தங்கள் விருப்பம் இல்லாமல் தங்களிடம் சேமித்து வைத்திருக்கின்ற தெய்வீக சத்திகளை தங்களுடைய சம்மதத்தோடு, விருப்பத்தோடு தான் குருதேவர் எடுத்துக்கொள்ளமுடியும் என்று கருத தேவையில்லை. எனவே, யாமவேத முறைப்படி குருதேவராக இருந்து செய்யக்கூடிய மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீக பூசைகளின் பயன் அந்தந்த குருதேவருக்குத்தான் உண்டு. அவர் மட்டும் தான் பயன்படுத்தமுடியும். எனவே, குருதேவராக இருப்பவர்கள் இந்த மாந்தரீக, தாந்தரீக, ஏந்தரீக பூசைகளை முழுமையாக பக்குவமில்லாத அடியான்கள், அடியாள்கள், அடியார்களுக்கோ சொல்லித் தரக்கூடாது. எச்சரிக்கை. இது (4) நான்வேத ஆணை. முழுக்க முழுக்க யாமவேதம் எல்லாக் கோயில்களையும் அருளாற்றலைப் பெற செய்ய உதவுகின்றவைதான். மேலும், இந்த யாமவேதத்தால் தான், மக்கள் விரும்புகின்ற பத்தி, சத்தி, சித்தி, முத்திநிலைகளை 'எளிதில் பெறமுடியும்' என்று, ஆதிசிவனாரே நான்காவது வேதமான யாமவேதத்தில் தம் கைப்பட எழுதி கையொப்பமிட்டு இம்மண்ணுலகுக்கு நான்கு வேதங்களும் அருளப்படுகின்றன என்று எழுதயுள்ளார். இதனால்தான், வேதங்களைப் படிப்பவர்களில் பெரும்பாலானவர்களுக்கு, 'அசுரவேதம்', 'அதர்வண வேதம்', யாமவேதம் என்ற மூன்றும் ஆதிசிவனாருக்கும், பார்வதிக்கும் பிறந்த மகனான முருகனால் முப்பத்திரண்டு வயது முதல் முப்பத்தாறு வயது வரை நான்கு ஆண்டுகள் கடுமையாக உழைத்து உருவாக்கப்பட்டவை என்ற பேருண்மை தெரிவதில்லை! தெரிந்தாலும் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுகிறார்கள்.

'இருக்குவேதத்தில்' இருப்பவை அனைத்தையும் படித்து வாழ்நாளை வீணாக்காமல் 'யாமவேதம்' ஒன்றை மட்டும் படித்தால் போதும்.

மண்ணுலகத்தை கடந்து சத்திகளைப் பெற விரும்புகிறவர்கள் வேண்டுமானால் 'அதர்வணவேதத்தை' பயன்படுத்தலாம்.

அசுரவேதம் மட்டும் பதிணெண்சித்தர் பீடாதிபதிகளாக இருக்கக்கூடியவர்களின் விந்துவழி வாரிசுகளுக்கும், குருவழி வாரிசுகளுக்கும், கருவழி வாரிசுகளுக்கும் உரியவை. ஆனால், பதிணெண்சித்தர் பீடாதிபதியுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டவராக உண்மையான தொண்டராக இருக்கக்கூடியவர்கள் தான் அசுர வேதத்தின் சத்தி, சித்தி, முத்திகளைப் பெறமுடியும். இல்லையென்றால், அசுரவேதமே அவர்களுக்கு எமனாக மாறும். இந்துவேதத்தின் பெயர்களை கூறிக் கொண்டு யாரையும் ஏமாற்ற இயலாது. ஏனென்றால் காலங்கள்தோறும் சிவப்பதவிகளில் அமர்ந்திருக்கின்ற சிவபெருமானை வணங்கி பத்தி செய்கின்றவர்கள் இருக்குவேதத்தை மானசீகமாக உணரமுடியும். அப்படிப்பட்டவர்கள் இருக்குவேதத்திற்கு பாதுகாப்பாக இருப்பார்கள். எனவே, இந்து வேதத்தையோ, இந்துமதத்தையோ எவராலும் சிதைக்கவோ, சீரழிக்கவோ இயலாது! இயலாது!! இயலாது!!!



- - - - -

ஓம்

# சாமி கும்பிடுவது எப்படி?!...

இப்படி ஒரு தலைப்பில் புத்தகம் ஒன்று வெளிவருகிறது என்றால், ஆத்திக உணர்வு முளைவிட்டு, இலைவிட்டு, துளிர்ந்து, செழித்து வளர ஆரம்பித்திருக்கிறது என்றுதான் பொருள். ஏனெனில், சாமி என்ற ஒன்று இருக்கிறதா? இல்லையா? என்று ஐயப்படுபவர்களே மிகுதியாக இருக்கக்கூடியதுதான் இன்றைய காலம்.

சாமி+யார்=சாமியார், சாமி யார்? என்று தேடி திரிபவர்கள்தான் சாமியார்கள் என்று இருக்குவேதத்திலே மூன்றாவது காண்டத்திலே 2வது மண்டலத்திலே 36வது நான்உரைகோவை வாசகமலர் குறிப்பிடுகின்றது.

இங்கு ஏன் இந்துவேதத்தின் கருத்து எடுத்துக் கூறப்படுகிறதென்றால், பதினென்சித்தர் மடம் மட்டுமில்லாமல் இருக்குவேதம், அசரவேதம், அதர்வணவேதம், யாமவேதம் என்ற நான்கு வேதங்கள் தமிழ்நாட்டில் வெள்ளாளர்கள் எனப்படுகின்ற உழவர் பெருமக்களிடையே இருக்கின்றன. ஆனால், காலப்போக்கில் நான்கு வேதங்களையும் தங்களிடையே பெற்றிட்ட இந்த வெள்ளாளர்கள் செய்கின்ற தொழிலால் வெள்ளாள கணக்கர், வெள்ளாள செட்டி (வெள்ளாஞ்செட்டி), வெள்ளாள தேசிகர், வெள்ளாள ஓதுவார், வெள்ளாள பண்டாரம், வெள்ளாள பூசாரி, வெள்ளாள குருக்கள், வெள்ளாள மறவர், வெள்ளாள கள்ளர், வெள்ளாள அகம்படியர், வெள்ளாள வன்னியர், வெள்ளாள தேவர், வெள்ளாள சேர்வை, வெள்ளாள நாயக்கர், வெள்ளாள ரெட்டியார், வெள்ளாள படையாச்சி, வெள்ளாள முதலியார், வெள்ளாளப்பிள்ளை, வெள்ளாள நாடார், வெள்ளாள நாட்டார், வெள்ளாள கவுண்டர் என்று தொழிலின் அடிப்படையில் தமது பெயர்களை மாற்றிக்கொண்டார்கள். ஆனால், காலப்போக்கில் இந்த வெள்ளாளர் என்ற அடைமொழி விடப்பட்டு விட்டது. அதனால்தான் சாதிகள் பல தோன்றின என்பதற்குரிய ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. எனவேதான், மூலவேதமும், முதல்வேதமான இந்துவேதத்தில் இருந்து சாமியார் என்ற சொல்லுக்கு பொருள் கூறப்படுகிறது.

ஆனால், இன்றைக்கு நாட்டு நடப்பில் சாமியார் என்ற சொல்லுக்கு 'பத்தி செய்து கடவுளாகவே மாறிவிட்டவர்கள்; வழிபடத்தக்கவர்; அருளாசி வழங்கத் தக்கவர்; கடவுளின் அருளைப் பெற்றவர் என்றும், சாமியார் என்பவர் துறவியாக, திருமணம் செய்து கொள்ளாதவராக இருக்கவேண்டும்; சாமியார் என்பவர் காவி கட்டியவராக இருக்கவேண்டும்; சாமியார் என்பவர் எந்தவிதமான ஆசைகளும் இல்லாதவர்களாக இருக்கவேண்டும்; சாமியார் என்பவர் எந்தவிதமான பந்தபாசமும் இல்லாதவராக இருக்கவேண்டும்;' என்பன போன்ற கருத்துக்கள் காலப்போக்கில் எப்படியோ தோன்றிவிட்டன.

இருக்குவேதத்தில் காண் - 3, மண - 2, நா.உ.கோ.வா.மலர் - 38யில் முறையாக திருமணம் செய்து குழந்தைக்குட்டிகளோடு வாழுகின்ற இல்லறத்திலிருந்து 'சாமியார்' என்ற நிலையைப் பெற்று கடவுளைத் தேட



முயற்சிக்கலாம். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று ஆசைகள்தான் மனித வாழ்வின் முக்கோண எல்லைகள். எனவே, இந்த எல்லைகளுக்குள்ளிருந்து எல்லாவிதமான, பந்த பாசங்களோடும், சொந்த பந்தங்களோடும் இருப்பவர்கள்தான். 'சாமி யார்'? 'சாமி எங்கே இருக்கிறது?' 'சாமி எப்படி இருக்கும்?' 'சாமிக்கும் நமக்கும் என்ன தொடர்பு?' சாமியை கும்பிட்டால் நமக்கு என்ன ஈட்டம் (இலாபம்) கிடைக்கும் நமக்கு என்ன நட்டம் (இழப்பு) ஏற்படும்? சாமி கும்பிடாவிட்டால்? சாமிகளில் எத்தனை வகை இருக்கின்றன? இந்த சாமிகளில் யாராவது ஒரு சாமி மட்டும் எப்பொழுதாவது ஏதாவது ஒரே ஒரு மனிதனுக்கு மட்டும் அருள்புரிந்து அவன் மூலம் சித்து விளையாடல் நிகழ்த்தி அவனை மட்டும் கடவுளாக்குவது ஏன்? இந்த சாமிகளுக்கு கண் இல்லையா? காது இல்லையா? இரவு பகலாக இந்த சாமிகளையே கும்பிட்டுக் கொண்டிருப்பவர்களைத் தெரியாதா? இந்த சாமிகள் திடீரென்று குருடன் புதையல் எடுத்ததுபோல ஆன்மீகத்துறை பற்றி தெரியாத ஒருவனை தேர்ந்தெடுத்து அருள்புரிந்து ஓரவஞ்சனையாக செயல்படுவது ஏன்?

தாடி, முடி, மீசை வைத்திருப்பவர்களை எல்லாம் சாமியார்கள் என்று சொல்லி விடுகிறார்கள். அப்படி சொல்வதோடு மட்டுமல்லாமல் தாடி, முடி, மீசை வைத்துக்கொண்டு பத்தியாக திருநீறு+குங்குமம் முதலியவைகளை பூசிக்கொண்டு கோயிலுக்குச் சென்று சாமி கும்பிடுபவர்களை எல்லாம் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலியவற்றை துறந்தவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தாடி, முடி, மீசை வளர்த்தவர்கள் இல்லற வாழ்விலேயே இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதாவது, சாமியார்கள் என்றால், துறவிகளாக இல்லற இன்பத்தை வெறுப்பவர்களாக பெண்களை இழித்தும், பழித்தும் பேசுபவர்களாக உலகோர் உண்ணக்கூடிய உணவை உண்ணாதவர்களாக, அரைவயிறு, கால்வயிறு மட்டும் சாப்பிடுபவர்களாக, என்னேரமும் கண்மூடி தவநிலையிலேயே இருக்கவேண்டும். இவர் உலகியலான எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது என்றெல்லாம் கருதுகிறார்கள். காலப்போக்கில் ஏற்பட்டுவிட்ட இந்த கருத்துக்களை இருக்குவேதத்தின் மூலம் தான் மறுக்கவேண்டியிருக்கிறது. அதாவது, முதலிலேயே குறிப்பிட்ட இருக்குவேதம் காண் - 3, ம - 2, நா.உ.கோ.வா.மலர் - 37யில் உலகியல் இன்பங்கள் அனைத்திலும் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டு, எல்லாவகையான மனித உணர்வுகளை உடையவர்களாக இருந்து கொண்டு, பெற்றோர், உடன் பிறந்தார், உற்றார் உறவினர் முதலிய சுற்றத்தார்களோடு எல்லாரையும் போல உலகியலாக மனஉணர்வுகளை பசுமையாக வைத்துக்கொண்டு, முழுமனிதனாக இருந்து கொண்டு, தாடி, முடி, மீசை முதலியவைகளை வளர்த்துக்கொண்டு சாமியை தேடுபவர்கள் தான் சாமியார்கள் ஆவார்கள். அதாவது, மனித வாழ்வில் உள்ள எல்லா உணர்வுகளும் உடையவர்களுடைய நெஞ்சமும், சிந்தையும்தான் கணவனும் மனைவியுமாக காட்சியளிக்கின்ற இந்துவேத கடவுள்களை கும்பிடமுடியும். அவர்களுடைய அருளைப்பெறமுடியும். காவிவேட்டிப் பற்றிய எந்தவிதமான கருத்தும் இருக்குவேதத்தில் இல்லை. ஆனால், சிவப்பு வேட்டியை கட்டிக்கொண்டு சிவப்பு மெய்ப்பை அணிந்து கொண்டு, சிவப்பு தலைப்பாகை கட்டிக் கொண்டு, இடுப்பில் மஞ்சள் வண்ணத்துணி (துண்டு) 9 முழம் நீளம்

அல்லது 7 முழம் நீளம் அணிந்து கொண்டு தான் உலகியலாக எல்லாவகையான வாழ்வியல் நிகழ்வுகளிலும் நேரடியாக பங்குகொண்டு வாழுபவர்களால் தான் சாமியை தேடமுடியும். இவர்கள் தாங்கள் சந்திக்கும் மகான்கள். ஞானிகள். தவசிகள். சித்தர்கள் முதலியவர்களிடம் சாமியார். சாமி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அதை ஏன் எல்லோராலும் பார்க்கமுடியவில்லை? மனிதர்களை காப்பாற்றுகின்ற சாமிகள் மனிதர்களால் எளிதில் பார்க்கமுடியாத அளவு எங்கோ மறைந்து வாழுவது ஏன்? இந்த சாமிகள் எந்த தத்துவத்தின் அடிப்படையில் அல்லது எந்த கருத்துக்களின் அடிப்படையில் அல்லது எந்த சோதனைகளின் அடிப்படையில் சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மட்டும் காட்சி அளிக்கிறார்கள்? அருள் வழங்குகிறார்கள்? இப்படிப்பட்ட சாமிகள் யார்? எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள்? இவர்களை எப்படி சந்திப்பது என்று பகுத்தறிவுப் பூர்வமாக வினாயெழுப்பி திரிபவர்கள் தான் சாமியார்கள். இவர்களுக்கும் மக்களின் வறட்டு கற்பனைக்கும் சம்பந்தமில்லை என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி. குருமகாசன்னிதானம். ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் தமது குருபாரம்பரியத்தில் விவரமாக எழுதியிருக்கின்றார். இத்துடன் இதுபோன்ற கருத்துக்களை ஓலைச்சுவடிகளில் எழுதி சிறுசிறு நூல்களாக இமயம் வரையிலும். கடல்கடந்தும் வாழ்ந்திட்ட இந்துக்கள் எல்லோருக்கும் அனுப்பி வைத்தார்.

சாமியாராக இருப்பவர்கள் பற்றிய உண்மைகள் இதுகாறும் குறிப்பிடப்பட்டன. கி.மு. 100 முதல் கி.பி. 150 வரை வாழ்ந்திட்ட மேலே குறிப்பிட்ட அமராவதியாற்றங்கரையில் உள்ள கரூர் பசுபதிசுவரர் கோயில் முழுமையாக நிர்மாணித்திட்ட தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி. குருமகாசன்னிதானம். ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்களின் காலத்தில். இந்துமதத்திலுள்ள சாமியார் பற்றிய விதிகளை பல்வேறு வகையான உலகியல் தேவைகளால். காரணங்களால் 'சாமி கும்பிடத்தெரியுமா?' என்று கேள்வி கேட்டு இரண்டு மூன்று தொகுதிகள் கையேடுகளாக (ஒருசாண் நீளமும். நான்கு விரல்கட்டை அகலமும் உடைய ஓலைகளில்) சிறுசிறு புத்தகமாக எழுதி பட்டுத்துணியில் சுற்றி நாடெங்கும் அனுப்பினார். அதாவது. எளிதில் எல்லோரும் கையில் வைத்துக்கொண்டு படிக்கவும். படித்தபிறகு வேட்டியின் மடியில் வைத்துக்கொண்டு இடுப்பில் செருகிக் கொள்ளவும் ஏற்ற வண்ணம் கையேடுகள் என்ற பெயரில்தாம் எழுதிய நூலுக்கு நூற்றுக்கணக்கான பிரதிகள் எழுதுவதற்காக காவிரிக்கரையில் ஈரோடு அருகில் நட்டாற்றிசுவரர் கோயில் என்ற ஒரு சிறிய தீவு போல் இருக்கும் இடம். அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட சித்தரடியார்களை வைத்து நகலெடுக்கும் பணியை செயலாக்கினார். ஏனென்றால். இவர் இவருடைய காலத்திற்கு ஏற்ப இந்து வேதத்திலிருந்து தேவையான கருத்துக்களை மட்டும் தேர்ந்தெடுத்து சொல்வதற்காக ஆதிசிவனாரை தவமிருந்து அழைத்து அவரோடு அவ்வப்போது உரையாடிடும் இடம் இந்த நட்டாற்று ஈசுவரர் கோயில். இப்பொழுதும் காவிரியாற்றின் நடுவில் சிறிய குன்றின் மீது. இப்பொழுதும் இருக்கிறது. அந்த கோயிலை கட்டுவதற்காக மதுரையை ஆண்ட ஆரியப்படை கடந்த பாண்டி நெடுஞ்செழியன் மூலம்தான். பாண்டிய நாட்டு சிற்பிகளை வரவழைத்து இந்த நட்டாற்று ஈசுவரர் ஆலயத்தை



நிர்மாணித்தார். அங்கு ஒரு கருகுலத்தையும் நிர்மாணித்தார். அந்த கருகுலத்தில்தான் 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் உருவாக்கினார். இந் கோயிலுக்கு பிறகுதான் கரூரில் அமராவதியாற்றங்கரையில் உள்ள கரூர் பசுபதி ஈசுவரர் ஆலயத்தை வெட்டவெளி கருவறையாக இருந்திட்ட பசுபதிஈசுவரர் ஆலயத்தை (வெட்டவெளி என்றால் எந்தவிதமான மதில்சுவர்களும் இல்லாமல் வெயிலிலும். மழையிலும் இருந்தது. ஆனால் வன்னிமரங்களும். பன்னீர்மரங்களும் அடர்ந்த காடாக பசுபதீசுவரரின் வெட்டவெளிக் கருவறை ஆலயம் இருந்தது. அந்த நாட்டை அழித்து கட்டிடங்களை எழுப்பி அதை) இன்று காணுகின்ற அளவிற்கு கருவறை கோயிலாக மாற்றினார். இதற்கும் பாண்டியநாட்டில் இருந்தே சிற்பிகள் வரவழைக்கப்பட்டார்கள். ஆனால். பல்வேறு வகையான காரணங்களாலும் ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் கண்ணகியால் உயிர்விட நேரிட்டதும். அதைப் பயன்படுத்திக் கொண்டு மதுரையில் இருந்த தமிழின. மொழி பகைவர்களால் முத்தமிழ் சங்கத்தை முழுமையாக அழிக்கப்பட்டு. நான்கு உகத்துக்கும் உரிய ஓலைச்சுவடிகளை எல்லாம் எரிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான சங்கப்புலவர்களும். புலவருக்காக படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்கள் என்பதாலும். மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் சூறையாடப்பட்டதாலும். மதுரைக்கு பாதுகாப்பாக இருந்த வைகையாற்றங்கரை நெடுகில் இருந்த முத்தமிழ் சங்கம் முற்றிலும் இடித்து தரைமட்டமாக்கப்பட்டதாலும். தமிழ்மொழி தொடர்பாக ஓலைச்சுவடிகள் வைத்திருப்பவர்கள் எல்லோரும் உடனடியாக அவற்றைக் கொண்டு வந்து மீனாட்சியம்மன் ஆலயத்தில் எரிந்துக்கொண்டிருந்த யாகத்தீயில் போட்டுவிட வேண்டுமென்று ஆணையிட்டார்கள்.

இதில் குறிப்பாக ஆதிசிவனார் தமது கைப்படவே எழுதிய இருக்குவேதத்தையும் அவரது மகன் முருகப்பெருமான் தமது கைப்பட எழுதிய அசுரவேதம். அதர்வாணவேதம். யாமவேதம் எனும் 4 வேதங்களையும் தேடித்தேடி அலைந்து கண்டுபிடித்தவையெல்லாம் உடனுக்குடன் எரித்தார்கள். அதாவது இந்துவேதம் இந்துமதம் தொடர்பாக இருந்த வைகையாற்றங்கரையிலிருந்த 18 திருமாளிகைகளையும் இடித்து தகர்த்து தரைமட்டமாக்கினார்கள். அப்பொழுது அங்கிருந்த ஓலைகளையெல்லாம் எரிப்பதற்கு பயந்துக்கொண்டு இரண்டு மூன்றாக வெட்டி முறித்து வைகையாற்று வெள்ளத்தில் எரிந்தார்கள். அத்துடன் இந்த 18 திருமாளிகைகளிலும் இருந்திட்ட தவசிகள். ஞானிகள். முனிவர்கள். இருடிகள். வேள்வி வல்லாளர்கள். ஐந்தீவேட்டல் ஆச்சாரியர்கள். முத்தீஓம்பல் ஆச்சாரியார்கள். சேவலோன்கலை பயிற்றுவிக்கும் வாத்தியார்கள் (The Tutors and Demostrators) பலரை கூட்டம் கூட்டமாக கரைபுரளும் வைகையாற்றில் தூக்கிப் போட்டார்கள். அதற்கு காரணம் அருளாளர்களாக இருந்த அவர்களை வெட்டிக்கொலை செய்தால் பாவம் என்று பயந்தார்கள். அதனால் அவர்கயெல்லாம் கட்டுமரத்தில் வைத்து ஆற்றில் போட்டார்கள். இதில் தாடி. முடி. மீசை வைத்தவர்களை கை. கால்கள் கட்டாமலும் மற்றவர்களையெல்லாம் கை. கால்களை கட்டி நடுஆற்றில் போட்டார்கள். அத்துடன் ஆதிசிவனாரே கைப்பட எழுதிய இந்துவேத. இந்துமத நூல்கள் அனைத்தையுமே எரித்து அழித்து விட்டார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக பதினெட்டு இலட்சம் சுருதிகளை

உடைய மணுநீதி நூல்கள் 18யும் நாடு முழுவதும் தேடி அலைந்து. தேடி கண்டுபிடித்து அழித்தார்கள். வைகையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதினால் தமிழ்ஓலைச்சுவடிகள் வைத்திருந்த பல குடும்பத்தார்கள் அவை நெருப்புக்கு இரையாகாமல் யா கையிலாவது கிடைக்கட்டும் என்ற நினைப்பில் அவற்றைக் கொண்டு போய் தாங்களாகவே வைகையாற்றில் போட்டு விட்டார்கள். ஏராளமானவர்கள் இதுபோன்று ஓலைச்சுவடிகளை வைகையாற்றில் போட்டு விட்டார்கள். அதுவும் ஓலைச்சுவடி கட்டுகளை வைகையாற்றின் நடுப்பகுதிக்கு போகும்படி வீசி வீசி எறிந்தார்கள். அதன்மூலம் தான் தமிழ்ஓலைச்சுவடிகள் கடல் வரை வந்து சேர்ந்தன. ஆனால் பதப்படுத்தப்பட்ட ஓலைச்சுவடிகள் தைலம் பூசப்பட்டது என்பதினால் பல ஆண்டுகளுக்கு தண்ணீரில் மிதந்தாலும். மூழ்கினாலும் கெட்டுப் போகாமல் இருக்கும். இதையெண்ணி அமராவதியாற்றங்கரை கருவூறார். கரூரை ஆண்டுக்கொண்டிருந்த சோழமன்னனின் பெரும்படையை மதுரைக்கு அனுப்பி போராடி ஓலைகள் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் எரிக்கப்படுவதை தடுத்திடவும். வைகையாற்றில் மிதக்கும்படி விடப்பட்ட ஓலைச்சுவடி கட்டுக்களை சேகரிக்கவும் ஏற்பாடுகளை விரைந்து செய்திட்டார். ஆனால். கரூரில் இருந்து சென்றிட்ட சோழ மன்னனின் படைகளுக்கு. மதுரையில் அழிவு வேலை செய்துக் கொண்டிருந்த இமயமலை சாரலில் இருந்து வந்திருந்த பிராகிருதமொழி பேசிய களப்பிறரும். கங்கை கடலோடு கலக்குமிடத்தில் இருந்திட்ட பாலிமொழி பேசும் களப்பிறரும் ஒன்று சேர்ந்து. சோழர் படையோடு பெரும்போர் நிகழ்த்திய காரணத்தினால். கரூரில் இருந்து சென்றிட்ட சிறிய படையால் மதுரைக்குள்ளேயே போகமுடியாமல் திரும்ப நேரிட்டு விட்டது. களப்பிறர்களின் ஆட்சியில் தொடர்ந்து தமிழ்நூல்களை எரிப்பதும். தமிழ்மொழியின் பற்றோ. புலமையோ உடையவர்களை எல்லாம் ஆங்காங்கே சாலைகளிலும். சாலைகளின் சந்திப்புக்களிலும் வெட்டிக் கொன்றார்கள் என்பதால். தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூறார் என்பதால். தாத்தா அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் மிகவும் மனம் வருந்தி தாம் நிர்மாணித்த பசுபதி ஈசுவரர் ஆலயத்தின் அருகில் தமது சொந்த இடத்தில் தமக்கென உருவாக்கியிருந்த நிலவறைக்குள் சென்று நீள்தவத்தில் ஆழ்ந்துவிட்டார். அந்த நிலவறையின் வாயிற்படி மூடப்பட்டு அதன்மேல். அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார். பத்தாவது பதிணென்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம். ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவரின் உலோகச்சிலை வைக்கப்பட்டு. அந்த நிலவறைக்கு மேல். கருவறை கட்டி. பசுபதீசுவரர் ஆலய சொத்துக்களையும். பூசைகளையும் நிர்வகிப்பதற்காக சோழ மன்னனின் அரசாணைப் பெற்று. தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரை மாணாக்கர்களில் பலர் நிலவறை. கருவறையை சுற்றி தருப்பைப் புல்லால் வேய்ந்த குடில்களில் குடியிருந்தார்கள். அப்படி குடியிருந்தவர்கள் நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட அருட்பட்டங்களையும் பெற்றவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்கள் புதியதாக. பழைய பசுபதீசுவரர் இலிங்கத்துக்கும் துணையாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கருவறைகளையும் சேர்த்து எல்லா கருவறைகளுக்கும் மொத்தமாக ஆறுகால பூசை செய்திட்டார்கள். அத்துடன் நிலவறைக்குள் இருந்த தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரைக்



கருவூறாருக்காக பகல் 11 முதல் 1-30 யிலும் இரவு நடுசாமம் 11 முதல் 1-30 யிலும் பசுபதீசுவரர் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நகராக்களை (முரசுகளை) முழக்கியும். தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்கள் தாமே வார்த்தெடுத்த வெண்கலமணியை அடித்தும் குருபூசை செய்தார்கள். இதைப் பின்பற்றியே தமிழ்நாட்டில் பலகோயில்களில் நகராக்களை ஒரே இடத்தில் முழக்கியும். வெண்கலமணியை அடித்தும். சிவன் கோயிலில் உச்சிகால பூசை மட்டுமின்றி ஆறுகாலபூசைகளையும் நிகழ்த்தினார்கள். இப்படி பத்தாவது பதிணென்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்களின் மாணாக்கர்கள். அடியான்கள். அடியாள்கள். அடியார்கள் எல்லோருமே இவர் நிர்மாணித்த பசுபதீசுவரர் ஆலயம் மட்டுமின்றி வெட்டவெளி கருவறை ஆலயமாக இருந்திட்ட சோழமாதேவி (சோழியாய்) கோயில். கரூர் நாட்ராயர். நாச்சியப்பன். முனியம்மாள் முதலிய வெட்டவெளி கோயில்கள். கரூருக்குள் இருந்திட்ட வஞ்சியம்மன். விளங்கியம்மன் (வழங்கியம்மன்) கரூர் கடைத்தெரு மாரியம்மன் என்று சுமார் 143 கோயில்களை தங்களுடைய நேரடி நிர்வாகத்தில் வைத்திருந்தார்கள். அதற்கு சோழ அரசு மன்னன் தமது குலகுருவாக. அரசகுருவாக இருந்திட்ட தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்களின் பேரிலேயே பட்டயங்கள் வழங்கினார். அப்பட்டயத்திலேயே சோழப் பேரரசுக்கு உட்பட்ட அனைத்து வகைப்பட்ட கருவறை கோயில்கள் வெட்டவெளி கருவறை கோயில்கள். வழிபாட்டுநிலைய கருவறை கோயில்கள். கோயில் மூலக்கருவறை கோயில்கள் அனைத்தும் கரூர் பசுபதீசுவரர் ஆலயத்தில் தாமே உருவாக்கிய நிலவறைக்குள் இருக்கக்கூடிய தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி. குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் எழுதியுள்ள கோயில் பூசை மொழிகள். கோயில் பூசை விதிகள். கோயில் பூசை செய்வதற்குரிய தத்துவ நூல்கள். பூசைக்குரிய செயல் சித்தாந்த நூல்கள் முதலியவற்றின் அடிப்படையில் தான் அதாவது பசுபதீசுவரர் கோயிலின் எல்லையில் தனக்கு சொந்தமான நிலவறைக் கருவறைக் கோயிலில் நீள்தவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் அடியான்கள். அடியாள்கள். அடியார்கள். கருவழி வாரிசுகள். குருவழிவாரிசுகள். விந்துவழிவாரிசுகள். விருப்பப்படிதான் கோயில்களின் அனைத்து நிர்வாகமும் செயல்பட்டாகவேண்டும். பசுபதீசுவரர் கோயில் போல சோழமண்டலத்திற்குள்ளும். சோழமண்டலம் கடந்தும் அரசகுருவாக. ஞாலகுருவாக இருந்திட்ட அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்கள் வெளியிட்டுள்ள பூசைமொழிநூல்கள். பூசைவிதிநூல்கள். பூசைதத்துவநூல்கள். பூசைசெயல் சித்தாந்த நூல்கள் இவற்றின்படிதான் எல்லா பூசைகளையும் செய்யவேண்டும். செய்யப்படவேண்டும். செய்யப்பட்டேயாகவேண்டும். இதற்குரிய உரிமை. தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்களால் உருவாக்கப்பட்டு கரூர் நட்டாற்றீசுவரர் ஆலய வளாகத்தில் இருக்கக்கூடிய கருகுலத்தில் அருட்பட்டங்கள் பெற்றிட்ட அருட்பட்டத்தவர்களும். கரூர் பசுபதீசுவர் கோயிலின் நிர்வாகத்திற்கு தொடர்புடைய அருட்பட்டத்தவர்களும்.

கரூர் பசுபதீசுவரர் கோயில் எல்லையில் தமக்கு சொந்தமான இடத்தில் கருவறை அமைத்து. அந்த நிலவறை கருவறைக்குள் நீள்தவத்தில் ஆழ்ந்திருக்கக்கூடிய அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார். ஞாலகுருசித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களால் தயாரிக்கப்பட்ட அருட்பட்டத்தவர்கள். தருப்பைப் புல்லால் குடிசை வேய்ந்து. குடியிருப்பவர்கள் கரூரிலும். சோழமண்டலத்திற்குள்ளும். சோழநாடு கடந்து வெளிநாடுகளிலும் வாழுகின்ற அருட்பட்டத்தவர்கள். சோழ மண்டலத்தில் உள்ள எல்லாக்கோயில்களையும் நிர்வகிக்கும் முழு உரிமையையும். பெருமையையும் பெறுகிறார்கள். இவர்கள் கையில் தான் எல்லா ஆலய நிர்வாகங்களும் இருக்கவேண்டும். இவர்கள்தான் இந்துவேத நெறிப்படி இந்துவேத முறைப்படி. இந்துமத மரபுப்படி எல்லா வகைப்பட்ட கோயில்களிலும் எல்லா வகைப்பட்ட பூசைகளையும் அருளாணையிட்டு செய்வார்கள். பதினெண்சித்தர்கள் அண்டபேரண்டத்திலிருந்து வந்த ஆதிசிவனார் அருளிட்ட இருக்குவேதத்திலுள்ள திருமுறைப்பூசை தருமுறைப்பூசை. கருமுறைப்பூசை. குருமுறைப்பூசை என்ற 4 வகைப்பட்ட பூசைகளையும் மேற்படி நான்கில் பொதுமக்கள் எத்தகைய பூசையை செய்ய விரும்பினாலும் அவர்கள் அந்தவகையில் 48வகைப்பட்ட கோயில்களிலும். 48 வகைப்பட்ட கருவறைகளிலும். 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகளிலும். 48 வகைப்பட்ட வழிபாட்டுநிலைய கருவறைகளிலும். 48 வகைப்பட்ட கோயில் மூலக்கருவறைகளிலும் செய்து கொள்ளலாம். இங்கு குறிப்பிடப்பட்ட நான்கு வகைப்பட்ட பூசைகளை பதினெண்சித்தர்மடம் நூல்களின் மூலம் விவரமாக தெரிந்து கொள்ளலாம் அல்லது இந்த நூலின் இரண்டாம் பாகம் வெளிவரும்போது இவை விளக்கப்படும்.

இவர்களுக்கு அந்த உரிமையும். பெருமையும் கரூர் சோழமன்னன் சோழவேந்தன். வஞ்சியான் விடுகின்ற அரசாணை இந்த அரசாணை உறையூரை தலைநகரமாக கொண்டுள்ள சோழநாட்டிற்கும் செல்லும் என்று பட்டயம் அளித்தான். அதன்படிதான் இன்றுவரை கரூர் பசுபதீசுவரர் கோயில் கி.மு. 60 முதல் கி.பி. 40 வரையில் வன்னிமரங்களும். பன்னீர் மரங்களும் நிறைந்த காட்டில் உள்ள வெட்டவெளி கருவறை கொண்டருளிய பசுபதி ஈசுவரர் ஆலயத்தை அங்கிருந்த மரங்களையெல்லாம் அகற்றிவிட்டு கருங்கல்லால் கருவறையையும் அதை சுற்றியுள்ள இடங்களையும் எல்லாவற்றிற்கும் பாதுகாப்பாக காவல் அரண் மதில்களையும் அமைத்தார். அத்துடன் தமக்கென சொந்தமான சோழமன்னனிடம் பட்டயம் பெற்ற இடத்தில் அதாவது கோயிலின் உயர்ந்த நெடிய நான்கு பக்கங்களும் சுற்றிவரக் கூடிய பெரிய மதில்களுக்கருகில் தன்னுடைய அருட்சத்திக் காவல் இருக்கவேண்டும் என்பதற்காக கோயிலின் வலது பக்கத்தில் நிலவறையொன்றை அமைத்தார். இந்த நிலவறை வேறு பசுபதீசுவரர் கோயில் வேறு என்று யாராவது பிற்காலத்தில் பிரிக்க நேரிடும் என்று அஞ்சி பசுபதீசுவரர் ஆலயத்தில் தனது நிலவறையையும் சேர்த்து ஒரு பெரிய காவல் அரண் மதில் எழுப்பினார். அதற்கு கிழக்குப் பக்கம் மட்டும் வாசல் வைத்தார். அந்த வாசலின் மீது நெடிய கோபுரம் ஒன்றையும் அமைத்தார். அதாவது தமது நிலவறைக்கு வருகிறவர்கள் கோயிலின் கோபுரவாசலின் வழியாகக் கூட வரலாம். அவர்கள் பசுபதீசுவரர் ஆலயத்தை வழிபாடு



செய்யலாம் என்பதற்காகவே கோயில் வாசலை அமைத்தார். அதேநேரத்தில் பூசைக்குரிய பத்தியாளர்கள் குருவின் சன்னிதானத்திற்கு மட்டுமே வந்து தங்கி பூசை செய்யவேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்காக நிலவறைக்கு முன்னால் கோயிலைச் சுற்றி கட்டிய கோட்டை அரணில் ஒரு வாசல் அமைத்திட்டார் (தெற்குதிசையில்). இந்த தெற்கு திசையில் அமைக்கப்பட்ட வாசல் வழியாக வருகிறவர்கள் நேராக தாத்தா பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம். ஞாலகுருசித்தர் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அமராவதியாற்றங்கரை கருவூறார் அவர்களின் நிலவறையின் வளாகத்தில் மட்டுமே சஞ்சாரம் செய்து தங்களுடைய குருநிலைப்பூசைகளை நிகழ்த்திவிட்டு ஓய்வும் வாய்ப்பும் விருப்பமும் இருந்தால் மட்டுமே பசுபதீசுவரர் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு போவார்கள். இவர்கள் குருநிலைப்பூசையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தால் பசுபதீசுவரர் ஆலயத்திற்குள் மட்டுமின்றி வேறு எந்த ஆலயத்திற்குள்ளும் செல்லமாட்டார்கள். ஆனால் தாத்தாவால் சக்கரங்கள் வைக்கப்பட்ட நூற்று தொண்ணூற்று இரண்டு (192) உண்ணாழிகளிலும் அருட்பட்டத்தவர்களாகவே அதாவது சித்தர்களாகவே சென்று இந்துவேத ஆகமப்படி பூசைகளை செய்து வருவார்கள். அதுவும் அந்த உண்ணாழிகளுக்கு அருள் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே செல்வார்கள். அதுவும் அந்த உண்ணாழிகளுக்கு அருள் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே செல்வார்கள். அதாவது உண்ணாழிகள் அருட்ஓட்டத்திலோ. அருட்ஊற்றிலோ. பழுதுகள். குறைகள். தேக்கங்கள். முடக்கங்கள். மந்திரவாதி பாதிப்புகள் என்று எதுவாக இருப்பினும் அப்பாதிப்புகள் அனைத்தையும் குருநிலைப்பூசைமுறையில் விரைந்து அகற்றிவிடுவார்கள். அதற்கு மேலும் பாதுகாப்பும் செய்து விடுவார்கள். அதாவது ஆதிசிவன் காலம் தொட்டு நான்காவது யுகம் முடியும்வரை தோன்றிடக்கூடிய 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் தோற்றுவிக்கக்கூடிய 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்கள் தான் 108 திருப்பதிகளும். 243 சத்திபீடங்களும். 1008 சிவாலய பீடங்களிலும் இவையல்லாமல் இருக்கக்கூடிய கருவறை. வெட்டவெளிக் கருவறை. வழிபாட்டுநிலையக் கருவறை. கோயில் மூலக்கருவறை எனப்படும் நான்கு வகைப்பட்ட கருவறைகளிலும் அருளூற்று ஊறுவதையும். அருளூற்று ஆற்றுப்பெருக்கெடுத்து உண்மையான பத்தியாளர்களுக்குச் சென்று சேரவும் உரிய வழிவகைகளை செப்பனிட்டு கொண்டேயிருப்பார்கள். அப்பொழுதுதான் இந்துவேத ஆகமப்படி கட்டப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட எல்லா கோயில்களும். வழிபாட்டு நிலையங்களும். முழுமையாக பொதுமக்களுக்கு உள்ள குறைகளைப் போக்கியும் சமுதாயத்திலுள்ள தீயசக்திகளை அடக்கியும் அநீதிகள் அதிகமாகும்பொழுது அருளாட்சி அமைத்தும் செயல்பட்டிடுவார்கள். எனவே இதற்கென அருட்படை திரட்டுவதும் அருட்போர் நிகழ்த்துவதும் உலகியலாக எல்லாவகையான போர்முறைகளை கையாண்டும் அருளாட்சியை அமைப்பார்கள். அருளாட்சியை நிலைநாட்டுவார்கள். இதற்கெனவே குருகுலம். திருகுலம். தருகுலம். கருகுலம் எனும் 4 வகைப்பட்ட அருட்கல்வி நிலையங்களை அருட்பயிற்சிப் பள்ளிகளை. சத்திசாலைகளை. சித்திச்சோலைகளை. முத்தி மன்றங்களை. ஞானிகளுக்கென அரசபாட்டைகளை உருவாக்குவார்கள். பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இவையெல்லாம் காலப்போக்கில் மீண்டும் மறைந்திடும்பொழுதுதான் மீண்டும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள்

தோன்றுவார்கள். அப்படி புதிதாக தோன்றிடும் பதினெண்சித்தர் பீடாதிபதி தமக்கு முன்பிருந்த எல்லா பீடாதிபதிகளின் போதனைகளையும். சாதனைகளையும். வேதனைகளையும் மனநீதிநூல்களையும் இந்துவேதத்திற்குரிய 392 நூல்களையும் இந்துமதத்திற்குரிய 36 நூல்களையும் நாட்டு வழக்கில் இருக்கக்கூடிய 4. 42. 368 சுலோகங்கள் எனப்படும் சூலகங்களையும் மனுநீதியிலுள்ள 18,00,000 சுருதிகளையும் பதினெட்டு (18) ஆண்டுகள் கற்றிடுவார்கள். கற்றதை பதினெட்டு (18) ஆண்டுகள் பயிற்சி செய்து பார்த்திடுவார்கள். அதற்கு பிறகு 36வது வயதிலிருந்து இல்லறவாழ்வை மேற்கொள்வார்கள். 36வது வயது முதல் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இல்லறத்தார்களாகவே இருப்பார்கள். இவர்களுடைய ஏந்தரீக. மாந்தரீக. தாந்தரீக பூசைகளுக்குப் பயன்படுகின்ற பெண்களின் குடும்பத்தில் வாழையடி வாழ்யென அருளாளர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். மேலும் இவர் அருட்படை திரட்டி அருட்போர் நிகழ்த்தி அருளாட்சி அமைப்பார்.

கரூர் பசுபதீசுவரர் கோயில் எல்லையில் அல்லது வளாகத்தில் தமக்கு சொந்தமான இடத்தில் தயாராக உருவாக்கி கி.பி. 150யில் நிலவறைக்குள் சென்ற நாளிலிருந்து நீள்தவத்தில் ஈடுபட்டுள்ள குருமகாசன்னிதானம். ஞாலகுரு. அந்தணர் அண்ணல். ஞானாச்சாரியார். சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் நிலவறைக் கருவறை வெள்ளாளர்களின் கையில்தான் இருந்து வருகிறது.

மதுரையில் அழிவுக்குப்பிறகு கொற்கை துறைமுகத்தின் துறைமுக கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியனின் தம்பி வெற்றிவேல் செழியன் சுமார் நாற்பது ஐம்பது ஆண்டுகாலம். களப்பிறர்களோடு போராடி மதுரை ஆட்சியை மீட்டான். அப்படி மீட்டியபிறகு தமிழகத்தில் இருந்திட்ட ஞாலகுரு. குவலய குருபீடம். பரப்பிறம்மம். குருமகாசன்னிதானம். தாத்தா சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களை சந்திக்க முறைப்படி கரூர் சோழனுக்கு அறிவித்து. அரசக் குடும்பத்தோடு வந்து. கரூர் பசுபதீசுவரர் கோயில் எல்லையில் தமக்கே சொந்தமான இடத்தில் கட்டி வைத்திருந்த நிலவறைக்குள் சென்று நிறைந்திட்ட சமாதியை. சமாதிமேல் வைக்கப்பட்டிருந்த உலோகச்சிலையை. தொட்டுக் கும்பிட்டு. அவரால் உருவாக்கப்பட்ட. நிர்மாணிக்கப்பட்ட கரூர் வெள்ளக்கோயில் நாட்ராயர். நாச்சியப்பன். முனியம்மாள் முதலியவர்களின் ஆலயம் மூனீசுவரர். முத்தையா. சோழியம்மாள் எழுந்தருளும் ஆலயம். கரூருக்குள் உள்ள வஞ்சியம்மன். விளங்கியம்மன் (வழுங்கியம்மன்) கடைத்தெருவில் உள்ள மாரியம்மன் ஆலயங்கள் முதலியவற்றோடு சோழநாடு முழுவதிலும் உள்ள அனைத்து கோயில்களிலும் வாழையடி வாழையென காவிரி நட்டாற்றீசுவரர் கோயில் கருகுலத்தில் தயாரான அருட்பட்டத்தவர்கள் தலைமையில். வழிகாட்டிலில்தான் ஆறுகால பூசையும். தேர்திருவிழா. திருநாள் முதலியவை அனைத்தும் கொண்டாடப்படவேண்டும் என்று பட்டயம் செய்து கொடுத்தான்.

அக்காலத்தில். அந்த நேரத்தில் வஞ்சிசோழனும். பாண்டி நாட்டு வெற்றிவேல் செழியனும் விடுத்த அழைப்பை ஏற்ற உறையூர் சோழன் கரிகாலன் நேரில் வந்து அந்த பட்டயத்தில் தனது முத்திரையையும் பதித்துக் கொடுத்தான்.



இந்த பட்டயம் பல நகல்கள் எடுக்கப்பட்டு கரூர் அருகிலுள்ள முடிகணம் என்ற முடிகண்ட சோழபுரத்தில் இருந்திட்ட பட்டியலில் உள்ள விவரப்படி இமயமலை வரை உள்ள கோயில் பூசாரியாக. அர்ச்சகராக. குருக்களாக. பண்டாரமாக. தேசிகராக. ஓதுவாராக இருந்திட்ட வெள்ளாளர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டது.

குறிப்பு:- இன்றைக்கும் இதுபோன்ற பட்டயங்கள் பல சோழிய வெள்ளாளர்கள். கொங்கு வெள்ளாளர். பாண்டிய வெள்ளாளர். இல்லத்துப்பிள்ளைவெள்ளாளர். வெள்ளாளர் செட்டி. வெள்ளாளர் நாயக்கர். வெள்ளாளக் கவுண்டர். வெள்ளாள முதலியார். வெள்ளாளப் பிள்ளை. வெள்ளாள சாணார். வெள்ளாள நாட்டார். வெள்ளாள நாடார். வெள்ளாள கள்ளர். வெள்ளாள மறவர். வெள்ளாள தேவர். வெள்ளாள அகம்படியார். வெள்ளாள சேர்வை. வெள்ளாள வன்னியர். வெள்ளாள ரெட்டியார். வெள்ளாள படையாச்சி எனப்படும் (323) முந்நூற்று இருபத்து மூன்று பட்டயங்களுக்குரிய வெள்ளாளர்கள் அனைவரிடமும் இருக்கின்றன. அண்மையில். அண்ணா திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பழனிமலையில் உள்ள பழநியாண்டவரை பூசை செய்யும் உரிமை வெள்ளாள பண்டாரங்களுக்குத்தான் உண்டு என்ற பட்டயம் டில்லி உச்சிநீதிமன்றம் வரை சென்று காட்டப்பட்டு மீண்டும் கோயிலை பண்டாரங்களே மீட்டியிருக்கிறார்கள். இதேபோல் உறையூரை ஆண்டுக் கொண்டிருந்த ஆதித்த கரிகாலன் குடும்பத்தோடு அமராவதியாற்றங்கரையில் உள்ள வஞ்சி மாநகருக்கு வந்து பசுபதீசுவரர் ஆலயம் வளாகத்தில் தமக்கேயுரிய இடத்தில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி. குருமகாசன்னிதானம். ஞாலகுரு. சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் தமக்கேயுரிய இடத்தில் தாமே நிர்மாணித்த நிலவறை கருவறைக்குள் சென்று நீள்தவத்தில் ஈடுபட்டிட்ட அரசகுருவுக்கு மரியாதை செலுத்தி. அவருடைய கருகுலத்தில் பயின்று அருட்பட்டத்தைப் பெற்ற வெள்ளாளர்களின் கையில்தான் அல்லது வெள்ளாளர்களின் பொறுப்பில்தான் சோழநாடு முழுவதும் உள்ள கோயில்களும். பாண்டியநாடு முழுவதும் உள்ள கோயில்களும் நிர்வகிக்கப்படவேண்டும் என்று எழுதப்பட்டுள்ள பட்டயத்தில் தாமும் கையெழுத்திட்டான். தனது முத்திரையும் இட்டான்.

இம்மூவரும் கொடிமுடி அருகிலுள்ள நட்டாற்றீசுவரர் கோயிலுக்குச் சென்று அங்கு கருகுலத்தில் இருந்த அருட்பட்டத்தவர்களையெல்லாம் சந்தித்து அவர்களில் தீச்சதர் (தீட்சிதர்) என்ற அருட்பட்டம் பெற்றவர்களிடம் சிதம்பரம் நடராஜர் கோயிலையும். பட்டர் என்ற அருட்பட்டம் பெற்றவர்களிடம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தையும் ஒப்படைத்தார்கள். இதேபோல் பழநியாண்டவர் கோயில். திருநெல்வேலி காந்திமதியம்மன் கோயில். பதினெட்டு சமயபுர மாரியம்மன் கோயில்கள். பதினெட்டு சமயநல்லூர் மாரியம்மன் கோயில்கள். 108 வகைப்பட்ட திருப்பதி கோயில்கள். 243 சத்திபீட கோயில்கள். 1008 சீவாலய கோயில்கள் முதலியவை அனைத்தையும் அங்கிருந்த அருட்பட்டம் பெற்றவர்களுக்கும். கரூர் அருட்பட்டம் பெற்றவர்களுக்கும். நிர்வாகம் செய்ய செப்புபட்டயம் வழங்கப்பட்டது. பெரும்பாலும் இந்த செப்புபட்டயங்கள் அந்தந்த

பூசாரி, குருக்கள், அருட்சினையாளர், பண்டாரம், கோயில்பிள்ளை, கோயில்முதலி, கோயில் ரெட்டியார், கோயில் செட்டியார், கோயில் தேசிகர், கோயில் ஓதுவார், கோயில் நாயக்கர், கோயில் மறவர், கோயில் தேவர், கோயில் நாடார், கோயில் அம்பலம், கோயில் படையாச்சி முதலியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் மூன்று நகல்கள் எடுக்கப்பட்டன. மூவேந்திரர்களும், தங்கள் தங்களுடைய நாட்டிற்கு எடுத்துச் சென்று அதற்குரிய நகல்கள் பல தயாரித்து மேலே குறிப்பிட்ட பூசாரி வர்க்கத்தினருக்கு கொடுத்திட்டனர். இதைப்பற்றிய விவரங்கள், இந்த நூற்றாண்டில் கரூர் பெரும் புலவர் மருதையாப்பிள்ளை அவர்களிடமும், முடிகணம் என்று சொல்லப்படுகின்ற முடிகண்ட சோழபுரத்திலும், சோழியாயி எனும் சோழமாதேவி கோயிலிலும், மதுரை பாண்டி வெள்ளாளர்களில் முத்துவீரபாண்டியன் (கோச்சடை, அனுப்பானடி, வில்லாபுரம்) நிலக்கோட்டை, கண்டப்பக்கோட்டை, கொண்டையன்பட்டி முதலிய பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற வெள்ளாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி வட்டாரத்து வெள்ளாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. சேலம் வட்டாரத்து வெள்ளாளர்களிடமும் நாமக்கல் வட்டார வெள்ளாளர்களிடமும், வான்கல்தவுட்டுபாளையம் முதலிய சேரநாட்டுப் பகுதி வெள்ளாளர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன. மற்ற குறிப்புகள் முடிகணம் என்ற முடிகண்ட சோழபுரத்தில் உள்ள வெள்ளாளர்களிடமும் 1) மதுரை, 2) உசிலம்பட்டி, 3) கூடலூர், 4) சின்னமனூர், 5) கன்னியாகுமரி, 6) நான்குநேரி, 7) திருச்செந்தூர், 8) தூத்துக்குடி, 9) கயத்தாறு, 10) எட்டயாபுரம், 11) விளாத்திகுளம், 12) கோவில்பட்டி, 13) திருச்சுழி, 14) காரியபட்டி, 15) சிவகாசி, 16) அருப்புக்கோட்டை, 17) சாத்தூர், 18) தேவிப்பட்டணம், 19) சாயல்குடி, 20) மானாமதுரை, 21) சோமநாதமங்கலம், 22) தேவகோட்டை, 23) திருவாடானை, 24) பரமக்குடி, 25) காரைக்குடி, 26) கோட்டைப்புதூர், 27) சிவகங்கை, 28) அறந்தாங்கி (ஆவுடையார்கோயில்), 29) பட்டுக்கோட்டை, 30) திருமயம், 31) ஆலங்குடி, 32) திருப்பத்தூர், 33) நார்த்தாமலை, 34) ஆதனகோட்டை, 35) குத்தாலம், 36) கும்பகோணம், 37) மன்னார்குடி, 38) பேரளம், 39) பூம்புகார், 40) பொறையார், 41) கரங்கம்பாடி, 42) நன்னிலம், 43) குடைவாசல், 44) நாகப்பட்டினம், 45) திருவாரூர், 46) திருவையாறு, 47) தஞ்சாவூர், 48) திருக்காட்டுப்பள்ளி, 49) திருமுட்டம் (ஸ்ரீமுஷ்ணு), 50) சேத்தியார்தோப்பு, 51) திட்டக்குடி, 52) திருவண்ணாமலை, 53) திருக்கோவிலூர், 54) விழுப்புரம், 55) விக்ரவாண்டி, 56) திண்டிவனம், 57) அச்சரப்பாக்கம், 58) மதுராந்தகம், 59) திருரெங்கப்பட்டினம், 60) கூடுவாஞ்சேரி, 61) திருப்போரூர், 62) சிங்கம்பெருமாள் கோயில், 63) சைதாப்பேட்டை, 64) திருவொற்றியூர், 65) பொன்னேரி, 66) கும்மிடிப்பூண்டி, 67) சூலூர், 68) அரக்கோணம், 69) சோளிங்கர், 70) திருவாலங்காடு, 71) ஆற்காடு, 72) படவேடு, 73) ஆம்பூர், 74) திருப்பத்தூர், 75) சோலார்பேட்டை (பச்சைமலை காடுகளில் வாழ்ந்த முனிவர்கள்), 76) காவேரிப்பட்டினம், 77) வேலூர், 78) கிருட்டிணகிரி, 79) கள்ளுண்டாகள்ளி, 80) தர்மபுரி, 81) மேட்டூர், 82) ஓமலூர், 83) தாரமங்கலம், 84) தொட்பையாறு, 85) சேலம், 86) நாமக்கல், 87) திருச்சி செங்கோடு, 88) ஈரோடு, 89) பெருந்துறை, 90) சத்தியமங்கலம், 91) பவானி, 82) அந்தியூர், 93) அரசனூர், 94) அவினாசி, 95) பல்லடம், 96) பொள்ளாச்சி, 97) ஆனைமலை, 98) கோயமுத்தூர், 99) திருப்பூர், 100) வால்பாறை, 101) போத்தனூர்,



102) மேட்டுப்பாளையம், 103) இருகூர், 104) சூலூர், 105) காரமடை, 106) காங்கேயம்... முதலிய 243 ஊர்களில் இருந்திட்ட வெள்ளாளர்களிடமும் (இந்த வெள்ளாளர்கள் ஏற்கனவே, குறிப்பிட்டபடி வெள்ளாளப்பிள்ளை, வெள்ளாள செட்டி, வெள்ளாள நாயக்கர், வெள்ளாள கவுண்டர், வெள்ளாள முதலியார், வெள்ளாள சானார், வெள்ளாள கோனார், வெள்ளாள நாடார், வெள்ளாள நாட்டார், வெள்ளாள மறவர், வெள்ளாள அகம்படியார், வெள்ளாள பண்டாரம், வெள்ளாள வன்னியர், வெள்ளாள படையாச்சி, வெள்ளாள ரெட்டியார்) பூசாரிகளிடமும் ஓலைச்சுவடிகள் கொடுக்கப்பட்டன.

இப்படி சாமி கும்பிடத் தெரியுமா? என்று கி.மு.விலேயே ஒரு நூல் எழுத நேரிட்டது என்று எண்ணும்பொழுது, வரலாறு திரும்பிக் கொண்டுதான் இருக்கும் (History repeats). அதாவது காலப்போக்கில் உலகியலில் வாழ்வியல் நடைமுறைகள் ஒருசில நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை ஒரே மாதிரியாகத்தான் திரும்பிடும். மக்களிடம் இருக்கும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், அணிந்து கொள்ளும் அணிகலன்கள், மெய்ப்பைகள் (சட்டைத் துணிமணிகள்) பயன்படுத்துகின்ற பொருட்கள். இதேபோல கதைகள், நாட்டிய வகைகள், நாடக வகைகள், சமய சமுதாய அரசியல் கண்ணோட்டங்கள் முதலியவைகள் எல்லாம் காலப் போக்கில் ஒருசில நூற்றாண்டுகளுக்குள் பழமையானவை என்று கருதி ஒதுக்கப்படும். புதியவை என்ற பெயரால் சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த அனைத்தும் நடைமுறைக்கு வரும். இதுதான் உலக இயற்கை. இதை இருக்குவேதம் காண்டம்-44, மண்டலம்-13, நாள்உரைகோவை வாக்கியம் ம-7 'உலகியலில் ஒரே நூற்றாண்டுக்குள் மக்கள் தங்களுடைய வாழ்வில் பயன்படுத்தப்படக்கூடிய அனைத்து பொருட்களையும் பழையவை, பயனற்றவை, முட்டாள்தனமானவை என்று ஒதுக்கி, முந்திய நூற்றாண்டில் இருந்த பழமைகளை புதுமை என்ற பெயரால் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவார்கள். அதாவது, பதினெண்சித்தர்கள் தோற்றுவித்துள்ள அகப்பண்பாடுகளும், புறநாகரீகங்களும்தான் அடிக்கடி மாறி மாறி அல்லது மாற்றி மாற்றி மக்களால் கையாளப்படுகின்றன. அதாவது பதினென்சித்தர்களுடைய இந்துவேதமும், இந்துமதமும் உருவாக்கியுள்ள வட்டத்திற்குள்ளேயேதான் இந்த உலகம் என்றென்றைக்கும் இயங்க இயலும். இதனால்தான் இந்துவேதம், இந்து மதமென்னும் ஆலமரத்தின் இலையாகவோ அல்லது கிளையாகவோ அல்லது விழுதுகளாகவோதான் அருளுலகிலும், பொருளுலகிலும் புதியவை என்பவை தோன்றிட முடியும்' இரு. காண்-44, மண்-13, நா.உ.கோ.வா.ம.-7. இப்படி இருக்குவேதம் கூறுகின்ற உண்மைகள் உலக சமய, சமுதாய, அரசியல் வரலாறுகளை உற்றுநோக்கும்பொழுது தெரியவரும்.

இப்படி மக்களுடைய எண்ணம், சிந்தனை, கருத்தோட்டம், உணர்வு போக்கு மேலும், ஆசை, விருப்பம், உணர்வு முதலியவைகள் எல்லாம் புதுமையானவை என்று நினைப்பையெல்லாம் பழமையானவைதான். இன்றைக்கு மக்கள் பழமையானவை பயனற்றவை, மூடநம்பிக்கைக்குரியவை, முன்னேற்றத்திற்கு தடையானவை, பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்று கருதுவது எல்லாம் ஒரு காலத்தில் புதுமையானவை, பயனுடையவை, நம்பிக்கைக்குரியவை

முன்னேற்றம் தருபவை அல்லது பெருமைக்கு உரியவை என்று கருதப்பட்டவைதான். அதாவது. ஒரு சில நூற்றாண்டுகளில் விரும்பி ஏற்கப்பட கூடியவை. ஒரு நூற்றாண்டுகள் கழித்தவுடன் தேவையற்றவை அல்லது பயனற்றவை அல்லது வீணானவை அல்லது மடமைக்குரியவை அல்லது பழமையானவை என்று ஒதுக்கப்பட்டு விடும். கேலிச் செய்யப்படும். இவைகளுக்கு எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. இரு: கா-23. மண்-42. நா.உ.கோ.வா.ம-36 'உருவ வழிபாடு. தேர்த்திருவிழா. கடைப்பிடிக்கக்கூடிய விரதங்கள். விரும்பி ஏற்றுச் செய்யக்கூடிய நோன்புகள். தவமுறைகள். பூசைமுறைகள் எல்லாம் விரும்பி ஏற்கப்படுவதும். சிறிது காலம் கழித்து இவையெல்லாம் மடமைக்குரியவை. மூடநம்பிக்கைக்குரியவை. பயனற்றவை. நேரத்தையும். பணத்தையும் வீணாக்குபவை. மனதை கெடுப்பவை. மானுட இன்பங்களுக்கு வேறானவை. மாறானவை என்று இழித்தும் பழித்தும் ஒதுக்கப்பட்டவை எல்லாம் போற்றி புகழப்பட்டு. விரும்பப்பட்டு. நம்பப்பட்டு. புதுவேகத்தோடு அதை கையாளுபவர்கள் அல்லது கடைப்பிடிப்பார்கள். அதாவது. பழையவை என்று கருதப்படுவதெல்லாம் பழமையல்ல! புதியவை என்று கருதப்படுபவையெல்லாம் புதியவை அல்ல. இதை விளக்கவேண்டுமென்றால். ஒரு கிணற்றுக்குள் இருக்கின்ற தவளை எவ்வளவு வேகமாக பல்வேறு கோணங்களில். திசைகளில் நீந்தினாலும் கிணற்றுக்குள் தான் இருக்கும். அதனால் கிணற்றை தாண்டி செல்ல இயலாது; இதைப்போலவே. இந்த உலகமக்கள் அனைவரும் இந்துவேதம். இந்துமதம் என்கின்ற கிணற்றுக்குள் சுற்றும் தவளைகள்தான். தவளைகளாகத் தான் இருக்கமுடியும். இதுதான் உண்மை. அதாவது ஒரு காலத்தில் கி.மு.வில் மசிடோனியமதம். உரோமானியமதம். இத்தாலியமதம். ஆங்கிலேயமதம். பிரஞ்சுமதம். அமெரிக்க செவ்விந்தியர்மதம். ஆப்பிரிக்க கருப்பர் மதம். எகிப்திய பர்ரோ மதம். சீனமதம். ஆப்கானிசுதானிய மதம். சொரசிட்டரிசம் எனும் பாலைவன மதம். ரசீயாவின் பலமதங்கள் அவற்றுள் மாஸ்கோமதம். சுமோலனிமதம். சைபீரியா பாலைவனமதம். சிங்கப்பூர் மதம். மலேசியமதம். பூடான் மதம். தைவான் மதம். தாய்லாந்து மதம் என்று தொண்ணூறுக்கும் (90) மேற்பட்ட மதங்கள் இருந்ததாக கி.மு. 8956 முதல் கி.மு. 8848 வரை வைகையாற்றங்கரை கருவூறார் மிகத்தெளிவாக கூறியிருக்கிறார். ஆனால் அவரே தனது குருபாரம்பரியத்தில் 'இந்த 90க்கும் மேற்பட்ட மதங்கள் அனைத்தும் இந்துமதம் எனும் கிணற்றுக்குள் இருக்கும் தவளைகளேயாகும்' என்று தெளிவாக குறிப்பிடுகின்றார். ஏனென்றால் மானுடர்களைவிட பலகோடி மடங்கு அளவுத்திறனும். ஆராய்ச்சித்திறனும் உடைய அண்டபேரண்டத்தவர்கள் காலம்காலமாக சிந்தித்து உருவாக்கியதே இந்துவேதம். இந்துமதம். எனவே தான் எத்தனைமதங்கள். வேதங்கள் தோன்றினாலும். அவை இந்துவேதம். இந்துமதம் எனும் ஆலமரத்தின் கிளைகளாகவோ அல்லது இலைகளாகவோ அல்லது விழுதுகளாகவோ தான் இருக்கமுடியுமே தவிர வேறு புதிய மரங்களாக இருக்கமுடியாது. அதாவது இந்துவேதம். இந்துமதம் என்பது மூலவேதமாக. முதல் வேதமாக. மூலமதமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவையே இம்மண்ணுலுகிலுள்ள எல்லா வகையான இனத்தவர்க்கும். நாட்டவர்க்கும். மொழியினருக்கும் உரியது என்று அறிவிக்கப்படுகிறது. ஏனெனில் இந்துவேதம்.



